முத்தமிழ் விழா சிறப்பு மலர் 2004


# இளம்பரிதி



பிரதேச செயலக கலாசாரப் பேரவை
கோறளைப்பற்று வாழைச்சேனை.

கோறளைப்பற்று பிரதேச செயலக
முத்தமிழ் விழா சிறப்புற வாழ்துக் கூறுகிறது.

# யோகா அன் சன்ஸ்



அரசாங்க அங்கீகாரம் பெற்ற வீதி அபிவிருத்தி,
ஒப்பந்தக்காரர், கட்டிட பொருள் விநியோகங்கள்,
வாகனங்கள் வாடகைக்கு வழங்கல்

# YOGA & SONS

உரிமையாளர் :

**எஸ். யோகநாதன்**

(சமாதானநீதவான்)



கல்குடா வீதி,
வாழைச்சேனை.

தொலைபேசி. இல. : 065 - 2257017

# இளம் பரிதி சிறப்பு மலர் 2004

## நான்காவது ஆண்டு
## முத்தமிழ் விழா சிறப்பு மலர்

எம்மோடிணைந்த கலைகள்
என்றென்றும் பேணிக் காப்போம்

வெளியீடு
கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம் - கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

## கோறளைப்பற்றுப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை

தலைவர் - திருமதி.கலாமதி பத்மராஜா (பிரதேச செயலாளர்)
செயலாளர் - திரு. கே.எஸ்.ஆர். சிவகுமார் (கலாசார உத்தியோகத்தர்)
பொருளாளர் - திரு. தி. ரவி (நிர்வாக உத்தியோகத்தர்)
இணைப்பாளர் - திரு. எஸ். ராஜ்குமார் (பதவிநிலை உத்தியோகத்தர்)
திருமதி. மே. பாஸ்கரன் (சமூர்த்தி முகாமையாளர்)
திருமதி. க.கஜேந்திரன் (சமூர்த்திவங்கி முகாமையாளர்)

**நிர்வாகக்குழு**

திரு. க. பரமானந்தராஜா
திரு. ச. இதயராசா
திரு. முத்துமாதவன்
திரு. செ. நல்லதம்பி
செல்வி. மா. யூனிதா
திரு. ஜி. ஏரம்பமூர்த்தி
திரு. வி. கிருபைரெட்ணம்
திரு. ஆ. அருளேந்திரன்
திரு. மு. தவராசா
திரு. அ. ஸ்ரீதர்
திரு. வி. கிருபானந்தம்
திரு. க. அனந்தராசா
செல்வி. சி. லோகேஸ்வரி
திரு. ஏ. ஜெயரஞ்சித்
திரு. W.G.M.J. ஆரியநந்த
திரு. அ.மு.சி. வேலழகன்

**விழா ஏற்பாட்டுக்குழு/ நிதி ஏற்பாட்டுக்குழு**

திரு. எஸ். ஜெயசேகர்
திரு. ஏ. வசந்தகுமார்
திரு. எஸ். வரதராஜா
திரு. கே. கஜேந்திரராஜா
திரு. ஏ. ஜீவரெத்தினம்
திருமதி. சாந்தினி குமாரவேல்
திரு. வி. தேவராஜன்
திரு. சி. அரியக்குட்டி
திரு. கே. நாகநாதன்
திரு. கா. ஜெகதீஸ்வரன்
திரு. கே. அற்புதநாதன்
திருமதி. எஸ். ஜமுனா
திரு. கே. லேசன்
செல்வி. மு. ஜீவராணி
திருமதி. கே. தங்கமலர்
திருமதி. சீலாவதி
திரு. கே. விமலநாதன்
திரு. என். ஜெய்காந்
திரு. ஆர். ரவி
செல்வி. எஸ். சுகுணா
திருமதி. ம. கவிதா
திருமதி. எஸ். சுமித்திரா

**விளம்பர சேகரிப்புக்குழு**

திரு. எஸ். உமேஸ்காந்
திரு. எஸ். சிவசாந்தன்
திரு. அ. அருள்நந்தி
திரு. க. இந்திரகுமார்
திரு. ச. நிமலநாதன்
திரு. த. தஜீதரன்

# இளம் பரிதி வீச்சுக்கள் ..........

**மலர்க்குழு**
திரு. மு.தவராசா
திரு. அ. ஸ்ரீதர்
திரு. எஸ். நிமலநாதன்
திரு. சீ. பரமானந்தராஜா
திரு. எம். முத்துமாதவன்

**ஓவியம்**
திருமதி. சாந்தினி குமாரவேல்

**விடய எழுதுனர்**
திரு. எஸ். மகாதேவன்

**கணனி பதிவு**
திரு. செ. கண்ணன்.
43/1, திருமலை வீதி,
மட்டுநகர்.

**அச்சகம்**
துர்க்கா அச்சகம்
334, திருமலை வீதி, மட்டுநகர்

**வாழ்த்துச் செய்திகள்**
திரு. வே. சண்முகம்
திரு. செ. புண்ணியமூர்த்தி
திருமதி. கலாமதி பத்மராஜா

**கவிதை**
செல்வன் சு. டிலக்சன்
செல்வி. கா. மாலினி

**சிறுகதை**
செல்வி. எஸ். அன்னலட்சுமி

**கட்டுரைகள்**
திரு. செ. யோகராசா
செல்வி.சாமித்தம்பி அனுஜாரதி
திரு. க. இந்திரகுமார்
திரு. கே.எஸ்.ஆர். சிவகுமார்

**ஏனையவை**
கௌரவ கலைஞர்கள்
போட்டிமுடிவுகள்
விளம்பரங்கள்
மலரும் நினைவுகள்
நன்றியுரை

**மாவட்டச் செயலகம் கச்சேரி மட்டக்களப்பு**

# ஆசிச் செய்தி

நாட்டில் அமைதியற்ற சூழ்நிலை நிலவிய காலப்பகுதியில் கூட மிகவும் வினைத்திறமையுடன் செயற்பட்ட கோரளைப்பற்று கலாசாரப்பேரவையானது வருடாவருடம் முத்தமிழ் விழாவினை நடாத்தி அதன் மூலம் சமுகத்திற்கும், கலைஞர்களுக்கும் உற்சாகமூட்டியதுடன், முத்தமிழ் விழாவை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரான "இளம்பரிதி" தனது முன்னேற்றத்தினை மீண்டும் ஒருதரம் பறைசாற்றியுள்ளது. இவ் இதழுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

பிரதேச செயலக ரீதியாக நடைபெறும் முத்தமிழ் விழாக்கள், பிரதேசத்தின் கலை, கலாசார மேம்பாட்டிற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிவனவாக அமைகின்றன. இத்தகைய முயற்சிகளே எமது பாரம்பரியத் தனித்துவங்களை நிலை நிறுத்திக்கொள்வதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

செயலக மட்டத்தில் இது போன்ற விழாக்களை ஏற்பாடு செய்வது மக்களின் முழுமையான பங்கேற்புக்கு வழி செய்யும். அத்துடன் இளைய தலைமுறையினர் எமது மரபுக்களையும், கலை, கலாசாரத் துறைகளின் தனித்துவத்தையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும்.

அவ்வகையில். பிரதேச செயலத்தின் பூரண அநுசரணையோடு கலாசாரப் பேரவையினர் முன்னெடுக்கும் முத்தமிழ் விழா சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திரு. வே. சண்முகம்*
*அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்,*
*மாவட்டச் செயலகம்,*
*கச்சேரி மட்டக்களப்பு.*

# வாழ்த்துச் செய்தி

## மாவட்ட செயலகம், மட்டகளப்பு



ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் முத்தமிழ் விழாவினை நடாத்தி சிறப்பு மலரை வெளியிடுவது அப்பிரதேச வரலாற்றினை ஆவணப்படுத்தும் முயற்சியாக இருப்பது சிறப்பு மிக்க விடயம் ஆகும்.

இவ்வகையில் கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையானது 2000ம் ஆண்டு தொடக்கம் இப்பணியினை மேற்கொள்வது சிறப்பு மிகு விடயம் ஆகும். எனிலும் 2001/2002ம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் இருந்து கோறளைப்பற்று தெற்கு பிரிந்து செல்லும் நிலையில் ஏற்பட்ட நிர்வாக சிக்கலின்போது நூல் வெளியிட்டில் ஓர் சிறு இடைவெளி ஏற்பட்டு தற்போது தொடர்ந்து வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இதுவரை வெளிவந்த 'இளம்பரிதி' முத்தமிழ் சிறப்பு மலர் மட்டக்களப்பு பிரதேச வரலாறு இலக்கியப் பணிகள் மற்றும் கோறளைப்பற்று பிரதேச வரலாறு இலக்கியப்பணிகளை தனது உள்ளடக்கமாக கொண்டு காணப்படுவது சிறப்பு மிக்கது.

கோறளைப்பற்று பிரதேச செயலக பிரதேச செயலாளர் அவர்களுக்கும் துணை நிற்கும் உள்ளக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும், சமூர்த்தி பிரிவின் உள்ளக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் இப்பணி தொடர நிதி வழங்கிய பொதுமக்கள், வர்த்தகர்கள் பொது நிறுவனங்கள் அனைவருக்கும் எனது அன்புடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்துக கொள்கின்றேன்.

திரு. செ. புண்ணியமூர்த்தி
மேலதிக அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம், கச்சேரி, மட்டக்களப்பு.



# ஆசிச் செய்தி

பிரதேச செயக கலாசாரப் பேரவையின் முத்தமிழ்விழா சிறப்பு மலர்கள் வெளிவரும்போது அப்பிரதேச ஆய்வாக அமையுமானால் அவற்றினுடைய தொகுப்பு நீண்ட காலத்தில் அப்பிரதேசம் அவ்மாவட்டம் என்பனவற்றின் முழுமையான ஆய்வாக அமையும் என்பது நமது நம்பிக்கை ஆகும்.

எமது பிரதேச செயலகத்தினால் 2000ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை வெளிவருகின்ற இளம்பரிதி மலர் மட்டக்களப்பு மாவட்டத்தினையும் அதனுள் உள்ளடக்கிய கோறளைப்பற்றின் பூர்வீகத்தினையும் அங்கு காணப்படும். நாட்டார் கூறுகளாகிய பிரதேச வரலாறு, இலக்கிய செல்வாக்குகள், நாடகம் இறை உணர்வுகளயும், பிரதேச அபிவிருத்திகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுவது சிறப்புமிக்கது எனலாம். இவைதவிர எமது பேரவை பாடசாலை மட்டத்திலும், வெளிமட்டக்கலைஞர்களையும் ஊக்கிவிக்கும் பொருட்டு பல்வேறுபட்ட நிகழ்வுகளை நடாத்தி பரிசு வழங்குவதுடன், சான்றிதழ் வழங்குவதுடன் கலைஞர்களை பாராட்டிக் கௌரவிப்பது குறிப்பிடத்தகக்து. இவற்றுடன் எமது கலாசாரப் பேரவை சிறுகதை, சிறுவர் பாடல் தொகுப்பு, இலக்கியப் பாட்டறைகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பணிகளுக்கு எமது பிரதேச செயலகமும், சமூர்த்தி பிரிவும் அதன் உள்ளக வெளிக்கள உத்தியோகத்தர்களுடைய பணிகளும் இங்கு போற்றத்தக்கது. இப்பணி தொடர நிதி வழங்கிய பொதுமக்கள், வர்த்தகர்கள் பொது நிறுவனங்கள் அனைவருக்கும் எனது அன்புடன் கூடிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். பாடசாலை மட்டத்தில் மட்.வாழைச்சேனை இந்துக்கல்லூரி செவ்வாழையினையும் கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் புத்தொளி எனும் இதழினையும் வெளியிடுகின்றது. அத்துடன் இளம் எழுத்தாளன் ஆகிய ஸ்ரீதர் ''இலக்கியா' எனும் சஞ்சிகை வெளியிடுவது மனதுக்கு மகிழ்வான விடயங்களே இவை மேன்மேலும் வளர்ந்து கோறளைப்பற்று பிரதேசம் கலைகளின் இருப்பிடாக திகழ என் வாழ்த்துக்கள் மீண்டும் மறுமடலில் சந்திக்கும் வரை.

திருமதி. கலாமதி பத்மராஜா
கலாசார பேரவைத் தலைவரும், பிரதேச செயலாளரும்,
பிரதேச செயலகம், கோறளைப்பற்று, வாழைச்சேனை.

# இயற்கை அழிவும் தீர்வும்

உலகிலே ஊனமுற்று
உறுதியிழந்து கிடக்கும் இயற்கையை
ஊக்கமுள்ள மாணவா
உயர்திட ஓடி வா!

உனக்கு நண்பனாய் இருக்கும் இயற்கை
அழிவதை தடுப்பதற்கு துணிந்திடு
அன்பான மாணவா அழகான இயற்கையை
ஆதரவோடு காத்திடு

அற்பமான எம் உடலுக்கெல்லாம் - மாணவா
ஆதரவளிக்கும் இன்ப இயற்கை
இழிவுற்று போவதை தடுக்க வா
இவ்வுலக வாழ்க்கை முற்றாக அழவதற்குள் - வா

மாணவன் பொங்கினால் மலையும் அதிர்வது போல்
மண்கூறு அழிவதை பயிரிட்டு காத்திடு
அடவிகள் அழிவதை சட்டம் திட்டி காத்திடு
அசுத்த சூழலை அகற்றி சுத்த வளியைப் பெறு

புனலை பொக்கிசம் போல் காத்திடு
பூமியில் இயற்கை பெருகிட மாணவா
இயற்கையின் நன்மையை இவ்வுலகுற்கு உணர்த்திடு
இவ்வுலகம் போற்றும் மாணவா

சு. டிலக்ஷன்
தரம் 11
மட். புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்
புதுக்குடியிருப்பு வாழைச்சேனை.

## அன்புக்கு முதல் வணக்கம்
## அதுதான் என் தெய்வம்

அவனின்றி அடியேனும் இல்லை இங்கு
அதனாலே அவனுக்கு முதலில் நன்றி
ஆவதெல்லாம் நல்லவையாய்க் காணவேண்டும்
ஆக்கி வைப்பான் அதற்காக என் வணக்கம்

இவனுக்கா தெரியாது இகத்தின் போக்கு
இது நியதி இன்னவென்றால் அதனைத் தாக்கு
ஈவதைப் போல் நற்சுவையைக் கண்டதில்லை
ஈனனாக வாழாமல் வைப்பாய் என்னை

உவமானம் இல்லாதான் பக்தனாகி
உலகுக்கு உழைத்தினும் அதுதான்மேலாம்
ஊணனென எந்தனை நீ விடவுமில்லை
ஊக்கத்தைக் கொடுக்கவேணும் கேள் என் சொல்லை
எவர் மேலும் எந்தனுக்கு கோபம் இல்லை
எவரேனும் நன்மை செய்தால் இன்பம் கொள்ளை

ஏவலுக்கு பிறந்தவனாய் இருக்க வேண்டும்
ஏற்றமாய் வாழ வழி காட்டவேண்டும்

ஐவரிலே ஒருவனாக திகழவேண்டும்
ஐக்கியத்தை அகிலத்தில் காணவேண்டும்
ஒவ்வாத பொருள் என்று எதுவுமில்லை
ஒரு நிமிடம் சிந்தித்தல் பாதை காண்பாய்

ஓதலுக்கு போகாதே ஓதல் கேட்பாய்
ஓர் மனதாய் அதை உணர்ந்தால் உயர்வை ஏற்பாய்
ஔவை நூல் பார்த்ததினால் அறிவு பெற்றேன்
ஔவியம் பேசுவதை அறுத்துவிட்டேன்

கத்திவிட்டால் நாகமணி ஒளி கொடுக்கும்
கற்றுவிட்டால் யோக நிலை உனைப் பிடிக்கும்
காக்கக் கடவுளுண்டு கண்ணிபத்தைக் கைப்பிடித்தல்
காதலித்தால் உந்தனை நீ களிப்புக் கடல் குளிப்பாய்

கிட்டா தொன்றில்லை கிளர்ச்சி செய்தால்
கிடந்து விட்டால் வாழக்கையது போகும் பொய்யாய்
கீர்த்தி உள்ளோரை மூர்த்தி என்று சொல்லுவார்கள்
கீழ்த்தனமாய் நாம் நடந்தால் கிள்ளுவார்கள்

குள்ளனாக இருந்தலும் பேச மாட்டார்
குளறுபடி செய்தாலே மதிக்க மாட்டார்
கூழ் குடிப்பதானாலும் குளித்துக் குடி
கூறும் நல்லறிவுரையை கூராய்ப் படி

கெட்டவனாய் குடி நடத்தவா நீ வந்தாய்
கெதியற்றோர்க்கு உதவல்லவா பிறப் பெடுத்தாய்
கேட்டறிந்து வாழ்வதிலே தவறு தில்லை
கேட்டு வாங்கி வாழ்வதுதான் பெரிய பிழை

கை லஞ்சம் வாங்குதல் போல் கயமை இல்லை
கை கொடுத்தால் அதைப் போல மகிழ்ச்சி இல்லை

கொடுத்துவாழ் நல்ல வற்றை இருக்கும் வரை
கொடுமைகளை கண்டபோது களைந்துவிடு
கோடிட்டு உனை உலகம் கணிக்கவேண்டும்
கோலாகல உலகை என்றும் காணவேண்டும்
கௌரவம் நிலைக்க என்றும் ஆளவேண்டும்
கவரிமான் உணர்ச்சி உள்ளம் நிறைய வேண்டும்

செல்வி. கா. மாலினி,
கும்புறுமூலை, வெம்பு - கிரான்,

# சொல்லாமலே (சிறுகதை)

அருண் நித்திரையின்றி விழித்திருந்தான் மனத்திற்குள் ஆயிரம் புறாக்கள் சிறகடித்து பறக்க, சொல்ல முடியா இன்ப அதிர்ச்சியில் அவன் மனம் மறு நாளை வரவேற்க காத்திருந்தான்.

ஆம்! விடிந்தால் சிங்கள - தமிழ் பத்தாண்டு சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு அருண் கைது செய்யப்பட்டு சிறையில் வாடிக் கொண்டிருந்தான். அவன் சற்றும எதிர்பாராத விதமாய் புத்தாண்டை முன்னிட்டு விடுதலை செய்யப்படும் கைதிகளின் பெயர் பட்டியலில் அவன் பெயரும் காணப்பட்டது. அதனால் எல்லையற்ற மகிழ்ச்சியில் தத்தளித்தான்.

நித்திரை அவனை பலமுறை அனைத்தும் அவன் தூக்கத்தினை தொலைதூரம் விரட்டி ''டாட்டா'' காட்டி இரவு முழுவதையும் சிவராத்திரியாக்கி, அவன் மனம் கடந்த காலத்திற்குள் புதைந்து போனது.

அந்த வேளையில் அவன் சிந்தனையை கலைத்தாற்போன்று ஒரு வாகனச் சத்தம் கேட்டது. நிதானித்தவன் விடிந்து விட்டதை உணர்ந்து கொண்டான். அந்த அறையில் உள்ள நான்கைந்து கைதிகளும் பரபரப்புடன் காணப்பட்டனர். ஒவ்வொருவர் முகங்களிலும் , தங்கள் சொந்த பந்தங்களின் பாச அலை வந்த ஒட்டிக் கொள்ள கண்கள் மின்மினிப்பூச்சியாய் பிரகாசித்தன.



யாரோ இரண்டு மூன்று பேர் நடக்கும் காலடி ஓசை கேட்க, யார் என்பதை அறிந்து கொள்ள அமைதியுடன் எதிர்பார்க்க. யாரோ மூன்று அதிகாரிகள் பயில்களோடு வந்து பெயர் பட்டியலை வாசிக்கையில் நூற்றுக்கணக்கான கைதிகளோடு அருணும் அந்த அறையை விட்டு வெளியேறி ஏதோ இரண்டு மூன்று பெரிய கொப்பிகளில் கையொப்பமிட்டுக்கொண்டு அந்த பஸ் வண்டியில் ஏறியமர்ந்தான். வரும்போது பயங்காரவாதி என்ற பெயரோடு கை கால் முறிந்த நிலையில் நொண்டி நொண்டி வந்த அடைக்கலம் புகுந்த சிறையை ஒரு முறை

கடைசியாக நினைத்துக்கொண்டான்.

பஸ் வண்டியில புறப்பட்டதும் ஏனையை கைதிகளுக்காகவும் ஒரு முறை பிரார்த்தனை பண்ணிக்கொண்டு, தன் இளமைக் கால நினைவில் நீந்தத் தாடங்கினான். பதினெட்டு வருடங்களுக்கு முன்பு வனப்பான இருபத்ததைந்து வயதின் வாலிப பருவத்தில் தான் ''அனிதா'' என்னும் அழகுப் பொக்கிஷத்தினை காதலித்து தன் மனைவியாக்கி கொண்டான். சந்தோஷ வானில் சிறகடித்துப் கொண்டிருந்த நாட்களிலி தான் இருவரின் அன்பின் சின்னமாய் 'அபி'' என்றொரு பெண் குழந்தை பிறந்தது. மலர்களின் மென்மையான இதழைவிட ரோஜா நிறத்தில் செக்கச் சிவனே எனப் பிறந்த அவள் அவர்கள் வாழ்வில் கஸ்டத்தினையும் அள்ளிக் கொண்டு வந்திருதிருந்தாள்.

ம்.... கஸ்டமும் நஸ்டமும் இன்பமும் துன்பமும் இயற்கையே கஸ்டத்தினை விரட்டியடிக்க கற்றுக்கொண்ட தொழில் மீன் வியாபாரம். ஏதோ கிடைக்கும் வருவாயில் அன்பான மனைவியுடனும் மழலைச் செல்வத்திற்கு குறைவில்லாமல் பிஞ்சு மொழியில் கொஞ்சி விளையாடும் அபியுடனும் வாழ்ந்த வேளையில் தான் ''விதி'' அவனை விளையாட நினைத்தது. வழக்கம்போல் அன்றும் அதிகாலையில் நேரத்துடன் மீனுக்கு புறப்பட்டு வந்தவன் இராணுவத்தின சுற்றி வளைப்பில் சிக்கிக்கொண்டான்.

பயங்கரவாதி என்று பல இராணுவங்களும் அவன் உடலைப்பதம் பார்க்க வேதனையிலும் கூட அவன் சிறுகுடும்பமே மனக்கண்ணில் நின்று கொண்டது. எத்தனை அடிகள் உதைகள்... ஒவ்வொரு விரல் நகங்களும் பிடுங்கப்பட்டு கண்ணைக்கட்டி.. ஐயோ துன்பத்தின் மேல் துன்பம் அவ்வேளையிலும் தன் மழலை மகளின் நினைவில் வேதனை மறந்து இறைவனிடம் கையேந்திக்கொண்ட நாட்கள் எத்தனை ? பழைய நினைவில் வேதனைகளையும் விம்மல்களையும் சுமந்து விழியோரங்களில் கண்ணீர்முத்துக்களை நிரப்பிக்கொண்டு அழுகை வர அதனை சமாளிக்கும் விதத்தில் இமைகளை அசைத்து அழுகையை அடக்கிக்கெண்டு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றான்.

ஒன்றா இரண்டா.. சொல்லியழ... ஒருவருடமா இருவருடமா எம் பிரிவுக்காலம் மனம் மாறிமாறி கேள்விகள் கேட்டுக்கொண்டன.

வறுமையின் காரணமாய் ஓலைகள் மேயப்படாத, செத்தை பல கிழிசல்களாய் காட்சியளித்த வீடு..... தானிருக்கும் போதே இந்தநிலை. இப்பமட்டும் ஒரு ஆண் துணையின்றி தாயும் மகளும் எப்படி வாழ்ந்து

கொண்டிருப்பார்களோ? மனம் கேட்டுக்கொண்டது. ஒரு நாள்.. பசி தாங்கமுடியாமல் அபி அழுத அழுகை? என் பக்கட்டில் கூட ஒரு ரூபாய் இல்லாமல் வீடு முழுக்க கிண்டிக்கிளறி காசு கிடைக்காமல் கடைசியாய் மனைவி அனிதா சிறு கொத்தமல்லியை கழுவி அவித்து, சீனியின்றி வெறுமனே கொடுக்க, குழந்தை குடிக்க மறுத்தது. ஞாபகம் வர அவன் நெஞ்சில் தீயை மூட்டியது. மனிதனின் வாழ்வில் எவ்வளவு கஸ்டங்களும் கொடுமைகளும்...?

பசியுடனும் களையுடனும் முகவாயை தன் கைகளால் தடவிக்கொண்டு, ஜன்னல் வழியால் வெயிலினைப்பார்த்து நேரத்தினை அளவெடுத்துக்கொண்டான். இன்னும் ஒரிரு மணித்தியாலத்தின் பின் கிராம மண்ணில் காலடி வைப்பதையிட்டு உற்சாகமடைந்தான்.

பார்வையினை வெளியே செலுத்தினான். ஊரே மாறிப்போயிருந்ததது. சின்ன வீடுகளெல்லாம் பெரிய வீடுகளாகவும் பெரிய வீடுகள் உடைக்கப்பட்டு தரைமட்டமாகவும், காடுகள் எல்லாம் சனங்கள் குடியேறி ஊராகவும் கிரவல் ரோட்டுக்கள் மெயின் ரோட்டுக்களாகவும் மாறியிருந்தது. அவன் உள்ளத்தை வியப்படையச்செய்தது. இயந்திர கதியில் சுற்றிக்கொண்டிருக்கும் உலகில் எத்தனை எத்தனை மாற்றங்கள்...?

சிந்தனை முத்தாய்ச்சிதற வீட்டு ஞாபகம் தொற்றிக்கொண்டது. வீட்டில் காகம் பறந்து பறந்து கத்திக்கொண்டிருக்கும் என வரவுக்காக. என் மனைவிக்கும் மகளுக்கும் எங்கே புரியும்? என்னைக் கண்டதும் அம்மா, அனிதா, அபி, பக்கத்து வீட்டுக்காரர் எல்லாம் ஓடிவந்து கட்டியணைத்து, சூழ்ந்து கொள்வார்கள். அருண் நினைத்துக்கொண்டான். வயதுபோன தாய் இருப்பாளோ இல்லையோ... ஒரு வயதில் கண்ட மகள் அவளின் முகம் கூட நினைவில்லை. அவன் மனம் விசும்பில் கொள்ள. சத்தம் போட்டு அழவேண்டும் போன்ற உணர்வு தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு விரக்தியின் விளிம்பில் இத்தனை வருடங்களும் உலகமே தெரியாமல் வாழ்ந்து பழகிப்போன உனக்கு பொறுமையில்லையா? மனச்சாட்சி அவனைக் கேட்டுக்கொண்டது.

நிமிடங்கள் மணித்தியாலத்தினை கரைத்துக்கொள்ள ஆயிரம் ஏக்கங்களையும் தாகங்களையும் மூட்டையாய் நெஞ்சில் சுமந்து கொண்டு இறங்கவேண்டிய இடம் வந்ததும் இறங்கினான். அட எத்தனை மாற்றங்கள் கனவுகளும், கற்பனைகளும் காணலாக, நிஜ உலகில் நீந்தும் அவன் மனம் ஒருமுறை நிதானித்து, தன்னை யாராவது அடையாளம் கண்டு

கொள்கிறார்களா, என்பதை கவனித்துக்கொண்டான்.

ஜனங்கள் அந்த வீதியிலே விறுவிறுப்புடன் இயங்கிக்கொள்ள, ஆயிரம் எதிர்பார்ப்புகளோடு நடையில் வேகத்தைக் கூட்டினான். இருபத்தைந்து வயதின் இளமையை புதைத்து வயோதிபத்தினை அணைத்து. சொசொரவென வளர்ந்த தாடியும் இடையிடையே வெள்ளிக்கம்பியைப் போல் நரைத்த தலையுமுடியுடனும் வளவிற்குள் காலடியெடுத்து வைத்தான்.

அட......! எவ்வளவு மாறுதல் ! நான் பிடிபட்டது வறுமையின் காரணமாய் அனிதா யாருக்காவது வளவினை விற்றுவிட்டு எங்கயாவது போயிருப்பாளோ? நினைத்துக்கொண்டான். வீடு பெரிதாய் கற்களால் கட்டப்பட்டு ஓடுகள் போடப்பட்டு ஒரு நடுத்தர வசதியினை காட்டி கொண்டது. வாசலில் நாயொன்று என்னைக் கண்டதும் வள்வள்வென குரைக்க, நாயின் ஓசைகேட்டு ஒரு பருவமங்கை சிட்டாய் ஓடிவந்து, வாசலில் நின்றிருந்த என்னிடம் நெற்றியைச் சுருக்கி பார்வையினாலே யார் நீங்க? என்று கேட்டாள்.

கோலம் மாறியிருந்த நான், யாரையும் மதிக்கமுடியாமல் ஏமாற்றத்தோடு பக்கத்து வீட்டுக்காரின் பெயரைச் சொல்லி வினாவினேன். ஓ அவங்களா...? அவங்க சொந்த ஊருக்கு போயி...கன நாளாகுது என்றார். பதினைந்து பதினாறு வயது மதிக்கத்தகுந்த பூரிபில் பூத்து குலுங்கிய பூவாய் அவளின் மென்மையான வார்த்தைகள்

இந்த வீடு யாருடையது ? கேட்டேன். எங்க வீடுதான் ஊருக்கு புதுசா? கேட்டாள். ம்..... தாகமாயிருக்கு! கொஞ்சம் தண்ணீர் வேணும் குடிக்க, கேட்டேன். உள்ளே வாங்க... இருக்கும்படி சொல்லி விட்டு உள்ளே சென்றாள். உண்மையிலே அந்த பிஞ்சு உள்ளம் யார் என்பதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. வராந்தாவில் அமர்ந்த நான் என்பார்வையை ஒருநொடியில் விசிறவிட்டேன் சாதாரண ஆடம்பரத்துடன் வரந்தாவை அலங்கரித்து.. திடீரென என்பார்வை அந்தப் படத்தின் மெல் பதிந்து நின்றது. ஆம் அது.... என்னுடைய இளமைக்கால் போட்டோவேதான்? பெரிதாய் பெரிபிக்கப்பட்டு பூமாலை போடப்பட்டு, சுளீர் என்று என்னுள்ளம் னிங் என மின்னிப்பூச்சி பறப்பதாய் ஓர் உணர்வு முட்டிமோதி சளசளவென கண்ணீர் காய்ந்து போன என் கன்னங்களை ஈரப்படுத்தி தரையை முத்தமிட்டுக்கொள்ள.......

தண்ணீர் கோப்படையுடன் வந்தவள் என் செல்வம் ''அபி'' தான் என்பதை

உணர்ந்து அ... அந்தப் போட்டோ யாருடையது? ச்சே ஏன் அழுறீங்க? குடிக்க தண்ணீர்.... என நீட்டினாள். என் மனம் வினாடி வேகத்தில் துடித்துக்கொள்ள, அது.... ''எங்கப்பா போட்டோ, அப்பாவை ராணுவம் புடிச்சி கொண்டு போயிட்டுதாம்'' ''யாரு சொன்னா.....? ''அம்மாதான்!'' ''ஒன் பேரு''? ''அபி....'' சட்டென்று பதிலளித்தாள். ''அப்ப உன் அம்மா.....? அம்மாவும் ''சித்தப்பாவும் கடைக்கு போயிட்டாங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவாங்க! என் கன்னத்தில் யாரோ ஓங்கி அறைந்தாற்போல் உள்ளது. ''சித்தப்பா'' அப்படியென்றால், என் அனிதா மறுமணம் செய்து கொண்டாளா? இயத்துடிப்பின் வேகம் அதிகரிக்க மனதிற்குள் கேட்டுக்கொண்டேன். என் கனவுகள் எல்லாம் காற்றில் பறக்கும் தூசாய் பறந்தன.

அப்ப நீ மட்டும் தானா பிள்ளை.....? மீண்டும் கேட்டேன். ம்... அம்மா, அப்பா பிடிபட்டதும் மிச்சம் கஸ்டப்பட்டு பிறகு வெளிநாடு போய்வீடெல்லாம் கட்டி. அதுக்குப் பிறகு தான் சித்தப்பாவை முடித்துக்கொண்டார். ஆனா எங்கட சித்தப்பா மிச்சம் நல்லவரு என்று நீண்டதாய் சொல்லி முடித்தாள்.

என் மூச்சுக் காற்றே என் முன் நிழலாய் நிஜத்தில் பேசிக்கொண்டிருப்பதை என்னால் நம்பமுடியவில்லை. நான் செத்து விட்டதாகவே நினைத்து விட்டார்கள். யாரைக் குற்றம் சொல்வது? என் விதியிது. பொத்தி வைத்திருந்த ஏக்கங்களை பக்கம் பக்கமாய் சொல்லி என் அபிக்குட்டியை கட்டியணைத்து ''உன் அப்பன் நான்தானடி'' என்று சொல்லியழுவதா? காலம் எம்மைப்பிரித்து வேடிக்கை பார்ப்பதை சொல்வதா? வார்த்தை முண்டிக்கொண்டு வெளிவர, உதடுகள் துடிக்கையில் நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். மீண்டும் என் தாயாரைப்பற்றி விசாரித்தேன்.

ஓ... எங்கட அப்பம்மா... அவ செத்து நான்கு வருடமாச்சு பாவம் அப்பாவுமில்லை... அப்பம்மாவுமில்லை.. ஒரு ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

அருண் யாருக்காக காலங்கள் கடந்து காத்திருந்து வந்தானோ, அந்த அத்தனை உறவுகளும் கைநழுவிப் போய்விட்டன. கரைசேரா ஓடமாய் மனம் தத்தளிக்க. உள்ளத்து உணர்வுகள் யாவும் மரத்துப்போய். தன் மகளின் முகத்தைக் கண்ட சந்தோஷத்திலும் அவர்கள் வாழும் வாழ்வை கலைக்க விரும்பாத அவன் தீர்க்க மாய் ஒரு முடிவெடுத்தான்.

இதை விட சிறையிலிருந்து செத்துப்போயிருக்கலாமென மனம் கதறியது காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ''செத்து விட்டதாய் இருக்கட்டும்'' என எண்ணியவாறு, அந்தப் பிஞ்சு முகத்தை ஒரு நிமிடம் வெறித்துப்பார்த்தவாறே ''நான் போறன்'' என்றான் அந்த யுவதியிடம் இல்லை. பதினைந்து வருடங்களுக்கு முன் தன்கையில் தவழ்ந்த அந்த ஆசை மகளிடம் கால் சோர்ந்து பின்னிக்கொள்ள, ஒரு பயித்தியக் காரனாய் தான் யார் என்பதை சொல்லிக் கொள்ள விரும்பாத அருண் ஒரு நடைப்பிணமாய் கால்கள் போன போக்கில் போகிறான். ஓர் ஆச்சிரமத்தை தேடி!

முற்றும்

**செல்வி. எஸ். அன்னலெட்சுமி**
**கொண்டயங்கேணி,**
**வாழைச்சேனை.**

கோறளைப்பற்று பிரதேச செயலக
கலாசார பேரவையின் முத்தமிழ் விழாவிற்கும்
''**இளம்பரிதி**''
சிறப்பு மலருக்கும் எமது வாழ்த்துக்கள்.

1. றெபெக்கா ஸ்ரூடியோ
2. நீயூ சென்ரல் கிளினிக்
3. வித்யா ஸ்ரூடியோ
4. கிறவுன் வீடியோ
5. முகைதீன் டெக்ஸ்
6. ரகுமானியா டெக்ஸ்
7. ஐங்கரன் ஸ்ரோர்
8. ஜெயா ஸ்ரோர்
9. சுலோசனா ஸ்ரோர்
10. கண்டி ஸ்ரோர்
11. பிள்ளையார் ஸ்ரோர்
12. சித்திக் ஸ்ரோஸ்



# சிறுகதை எழுதுவோம்

## ஓர் ஆரம்ப பயிற்சி

கலாநிதி செ. யோகராசா
தலைவர் மொழித்துறை.
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, செங்கலடி.

மாணவர்களது எழுத்தாற்றலை வளர்த்தெடுப்பதில் பாடசாலையின் பங்கு கணிசமானது என்பது யாவரும் அறிந்ததே. இதனாலேயே. பாடத்திட்டத்திலும் பாடநூல்களிலும் தேர்வு வினாத்தாள்களிலும் தமிழ்த்தினப் போட்டியிலும் மாணவரது எழுத்தாற்றல் வெளிப்பாட்டிற்கு இடமிளிக்கப்பட்டது. இவ்விதத்தில் சிறுகதை ஆக்கம் தொடர்பான சில விடயங்களை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

பெரும்பாலான மாணவர்கள் சிறுகதை எழுதுகின்ற சந்தர்ப்பங்களில் சிறுகதை என்று கருதிக்கொண்டு 'கதை' யையே எழுதுகின்றனர். அதாவது கதைக்கும் சிறகதைக்கும் இடையிலான வேறுபாடுகளை அறியாதவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே, கதை ஒன்றினை இங்கு தந்து அதனைச் சிறுகதையாக உருமாற்றி அதனூடாகச் கதை, சிறுகதை வேறுபாடுகளை உணரவைக்கும் பரிசோதனை முயற்சி இங்கு மேகற்கொள்ளப்படுகின்றது.

## கதையும் சிறுகதையும்

ஒருநாள் ஒரு காட்டில் மான் ஒன்று இறந்து கிடந்தது. இதனைக் கண்ட சிங்கமும் ஒரு கரடியும் அந்த மானைத் தின்பதற்காக ஒரே சமயத்தில அங்கு வந்தன.

சிங்கம் கரடியைப் பார்த்து ''நானே முதலில் இதனைக் கண்டேன். ஆதலால் நானே முதலில் உண்பேன்'' என்றது. அதற்குக் கரடி நானே முதலில் இதனைக் கண்டேன். ஆதலால் நானே முதலில் உண்பேன்'' என்றது.

இதனால் இரண்டும் சண்டையிட்டன் வெகுநேரம் இரண்டும் கடுமையாகச் சண்டையிட்டன.

தற்செயலாக அங்கு வந்த நரி ஒன்று இதைக் கவனித்தது. சண்டையினால் களைத்த சிங்கமும் கரடியும் நிற்கமுடியாமல் கீழே

விழுந்து படுத்தன. இது தான் நல்ல தருணம் என்று நரி எண்ணியது.

சிங்கத்திற்கும் கரடிக்கும் தெரியாமல் மானைத் தின்போம் என்று நினைத்து மெல்ல நடந்ததது.

மான் கிடந்த இடத்திற்கு சென்றது அதைத்தின்ன ஆரம்பித்தது தன் வயிறு நிரம்பும்வரை அந்த மானைத் தின்று முடித்தது. மெதுவாக வந்த வழியே திரும்பியது.

சண்டையினால் களைத்துக் கிடந்த சிங்கமும் கரடியும் எழுந்தன. மானின் இறைச்சியை காணவில்லை வெறும் எலும்புகளே கிடந்தன.

அவ்வேளையில் நரி ஒன்று வெகுவேகமாகச் செல்வதை அவை கவனத்தன. வீண் பிடிவாதத்தினால் கிடைத்த உணவை இழந்து விட்டோமே என்று ஏங்கின தங்கள் அறிவின்மையை நினைத்து வருந்தின.

''வீண் பிடிவாதம் நன்மை தராது''

*****

1. ஒரு கதையை சிறுகதையாக்கும் முயற்சி இது
2. முதல் வரைவு (First Draft) என்பதை மனதில் கொள்க.
3. ஒப்பிட்டு நோக்குக
4. தலைப்பு இடுக

''நான் நான் முதன்முதலாக அதனைக் கண்டேன்''.....
''நான்தான் முதலிலே தின்பேன்''
இவ்வாறு உரத்துச் சத்தமிட்டு கூறியது சிங்கம்.

வார்த்தைகள் கடுஞ்சினத்துடன் வெளிவந்து கொண்டிருந்தன. வாயிலிருந்து எச்சில் ஊறுவதை அதனால் தடுக்க இயலவில்லை கொழுத்த மான் அல்லவா அந்த நாவல் மரத்தடியில் இறந்து கிடக்கிறது. !

''முதலில் நான்தானே கண்டேன் நான்தான் தின்பேன்''என்றது கரடி

விட்டுக்கொடுக்கத் தயாரில்லை இரண்டுமே சண்டை எந்தநேரமும் ஆரம்பிக்கலாம் போலிருந்தது.

வார்த்தைகள் முற்றின! சண்டை ஆரம்பமாகி நிகழ்ந்து கொண்டிருந்தது. அவ்வேளியிலே எங்கிருந்தோ வந்து சேர்ந்தது அந்த நரி சண்டைக்காட்சி நரியையும் கவர்ந்ததது. ''சபாஷ் சபாஷ்...''. இவ்வாறு அடிக்கடி கூறி தனது பாராட்டுதல்களை அவ்வப்போது வழங்கியது நரி.

ஊக்கம் கிடைக்கவே சிங்கமும கரடியும் தம்மை மறந்து சண்டை

செய்துகொண்டிருந்தன
கொழுத்தும் வெயில்
நேரம் நழுவிக்கொண்டிருந்தது.
களைப்பு ஒருபுறம் பசி மறுபுறம்.
தமக்குத்தாமே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திக்கொண்டன.
சிங்கமும் கரடியும்.

''எமக்குள் நாம் வீண் பீடிவாதம் பிடிக்காமல் இனியாவது மான் இறைச்சியைத் தின்போம்'' இவ்வாறு கூறிக்கொண்டு எழுந்து நாவல் மரடித்தடி நோக்கிப் புறப்பட்டன.

இரண்மே நாவல் மரடித்தடியை நெருங்கி விட்டன தன்மை மறந்து உறங்கிக்கொண்டிருந்த நரி சலசலப்புச் சத்தம் கேட்டு வழித்துக்கொண்டது. மரியாதை செலுத்துவது போல் சடாரென்று எழுந்து நடக்கமுடியாமல் நடந்து ஒரு புறமாக ஒதுங்கிச் சென்றது நரி. சிங்கமும் கரடியும் நாவல் மரத்தடியில் மானின் உடல் கிடந்த இடத்தை உற்று நோக்கின. அங்கே......

மானின் எலும்புகள் மட்டமே சிதறிக்கிடந்தன சிங்கத்தையும் கரடியையும் அனுதாபத்துடன் பார்ப்பதுபோல
திரும்பிப் பார்த்த இரண்டும் தொலைவில் நரி ஓடிக்கொண்டிருந்தது.

இனி மேற்குறிப்பிட்ட 'கதை' க்கும் பிற்குறிப்பிட்ட 'சிறுகதை' க்கும் இடையினை வேறுபாடுகளைக் கவனிப்போம் இவ்விதத்தில் பின்வரும் விடயங்கள் முதன்மையாகின்றன.

(i) அமைப்பு நிலையில் 'கதை' க்கும் 'சிறுகதை'க்கும் மிடையில் வேறுபாடு காணப்படுகின்றமை.
(ii) நோக்கு நிலையில் 'கதை' யில் பிரச்சாரம் வெளிப்படையாக அமைகிறது. சிறுகதையில் உள்ளுறைந்துள்ளது.
(iii) 'கதை' யைவிட 'சிறுகதை'யின் மொழிப் பிரயோகம் வலுவானதா கவும். செறிவானதாகவும் உள்ளது. ஏனைய வேறுபாடுகளை மாணவர்கள் கண்டுகொள்வார்களாக?

இறுதியாக ஒன்று மேலுள்ள சிறுகதை முதல் வரைபு (First Draft) மட்டுமே அதாவத சிறுகதை என்பது ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் திருத்தி ஏழுதப்பட வேண்டியது. சிற்பம் போல் செதுக்கிக்கொண்டே இருக்கவேண்டியது.

உண்மைதான் ; சிறுகதை எழுதுவதென்பது ஒரு தவம் ஒரு பிரசவம்.

# கோறளைப்பற்று பிரதேச நாட்டாரியல் கூறுகளின் பிரதிபலிப்பு

ஈழநாட்டில் கிழக்கு கரையோரமாக நீண்டு கிடக்கும் கிழக்கு மாகாணத்தின் வடபகுதியல் அமைந்துள்ளதே கோறளைப்பற்றாகும். பற்று என்பது நாகரீகமடைந்த மக்கள் ஊரமைத்து வாழும் பகுதிக்கு வழக்கில் உள்ள பெயர் இதன்படி கோரப்புற்கள் அதிகம் கொண்ட ஓர் பரந்த நிர்வாக நிலப்பிரிவினை கொண்ட பரப்பில் நாகரீகமான மக்கள் ஊரமைத்து வாழ்ந்தமையினை சுட்டி நிற்கின்றது. எனவேதான் இப்பிரதேசம் கோறளைப்பற்று என அழைக்கப்படுகிறது.

கோறளைப்பற்று பிரதேசமானது ஆரம்பத்திலே வடக்காகிய வாகரை, மத்தியமாக ஓட்டமாவடி, ஆகிய பிரதேசங்களை் கொண்டு இயங்கி வந்தது ஆனால் தற்போது ஓட்டமாவடி இருபிரதேச செயலக பிரிவுகளாகவும் கோறளைப்பற்று பிரிவானது தெற்கே கிரானை தலைமையாகக்கொண்டு இயங்குவதனால் தற்போதைய கோரளைப்பற்று என்பது கும்புறுமூலை தொடக்கம் சிவந்தீவு வரை எமது பிரதேச செயலகத்தை மையமாக கொண்டு இயங்கிவருகிறது. கோறளைப்பற்று என்பதன் தொன்மைக்கு இலங்கை தொல்பொருள் ஆணையாளரான டாக்டர் பரணவிதான அவர்களால் வெளியிடப்பட்ட Incription of Ceylon எனும் வெளியீடு சான்றாகும். இதில் இவர் மட்டக்களப்பை பற்றி குறிப்பிடும் போது எல்லைகளாக காணப்பட்ட ஐந்து பற்றுக்களில் கோறைப்பற்றும் ஒன்றாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இப்பிரதேசம் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய வளங்களை கொண்டது.

ஒரு நாட்டு மக்களின் நாகரீகம், பண்பாடு, வரலாறு, பழக்கவழக்கம் போன்ற நாட்டு நடப்புக்களை உண்மையான முறையில் படம் பிடித்து காட்டுவது நாட்டுப்புற மக்களின் மரபு வழியான படைப்புக்கள் இவை சமுதாய வளர்ச்சியை காட்டும் காலக்கண்ணாடிகள் எனலாம். எமது மக்களின் கலை, கலாசாரம். சமயம் , சமூகம், மொழி, தொழில், உணவுப் பழக்கவழக்கம். இடப்பெயராய்வு, இலக்கியம் மக்கட் பெயராய்வு, திருமண முறைகள், கிராமிய பண்பாடு விளையாட்டு, கல்வி, சடங்குமுறைகள், மருத்துவம்,

தொழில்நுட்பம் போன்ற நாட்டாரியல் கூறுகளின் உற்று நோக்குமிடத்து இம் மக்களின் உன்னத போக்கினை அறியலாம்.

கோறளைப்பற்று பிரதேசத்தின் பல்லின மக்களும் செறிவாக பரந்து வாழ்வதை நோக்கலாம். மக்கள் தமது நம்பிக்கைதான், பழக்கவழக்கங்கள், சடங்குகள் என்பவற்றை தமது சமயத்தின் அடிப்படையில் பின்பற்றுவதனை நோக்கக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் ''தெய்வம் ஒன்றே அதனைப் பல வடிவங்களில் வணங்கலாம்'' என்ற கொள்ளைக்கு அமைவாக வழிபாடு மேற்கொள்கின்றனர். மக்கள் வாழ்க்கையின் இலட்சியம் இறைவனை அடைதல் அல்லது இறைமையை பூரணமாக உணர்தல் ஆகும். ஆனால் சாதாரண மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இறைவனை வணங்குகிறார்கள். தங்களினதும் கிராமத்தினதும் பாதுகாப்பு கருதியும் மழைவேண்டியும் நோய் நீங்குவதாகவும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவேண்டியும் கடவுளை அதற்கேற்ற வடிவங்களில் வணங்கி வருகிறார்கள். எமது பிரதேசத்தில் ஆகம முறைப்படி வழிபாடுகள் இடம்பெற்றாலும் ஆகம முறைக்கு புறம்பான வழிபாடுகளும் நிலவுகின்றன. இங்கு நாகவழிபாடு, மரவழிபாடு, வைரவவழிபாடு என்பவும் காணப்படுகின்றன. சிலகிராமிய வழிபாட்டு முறைகளிலே சடங்குகள் பலியிடல் நேர்த்திகள் செய்வது போன்றன இடம்பெறுகிறது.

ஆலயங்களில் தெய்வமேறியவர்கள் ஆடுவது முக்கிய நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. தெய்வங்களில் ஒன்றை ''வாலாயம்'' செய்பவர்களுடைய உடலில் அத்தெய்வம் உறைகின்றதாகவும் மந்திர உச்சாடனங்கள் அத்தெய்வங்களை உசுப்பிவிடுவது மூலம் அவற்றை ஆடச்செய்யலாம் என்றும் அத்தகையவர்கள் கூறும் ''கட்டு'' (அருள்வாக்கு) பலித்து விடும் என்றும் பலர் திடமாக நம்புகிறார்கள். இத்தகைய நம்பிக்கை நீண்டகாலமாக வழக்கத்தில் உள்ளது. இவ்வழிபாடுகளை பேச்சியம்மன், மாரியம்மன், நாகதம்பிரான், நரசிங்கவைரவர் போன்ற கோயில்களில் காணலாம். ஏனைய மதப்பிரிவினர்களாக இஸ்லாமியம் , கிறிஸ்தவம் என்பன காணப்படுகிறது. அண்மைக் காலமாக பிரச்சாரங்கள் காரணமாக பாரியளவில் மதமாற்றங்கள் இடம்பெற்று வருவதையும் (குறிப்பாக இந்துக்கள் கிறிஸ்வதர்களாக மதம் மாறுதல்,) அவதானிக்க கூடியதாக உள்ளது.

இப்பிரதேச கல்வியறிவினை நோக்கும்போது இம்மக்கள் பாடசாலைக் கல்வி, தொழிற்கல்வி என்பனவற்றை வளர்த்துக் காக்க சாதியமைப்பினை துணை கொண்டிருந்தனர். கட்டிடம், சிற்பம், சித்திரம், ஆடல், இசை, முதலிய கலைகள் மட்டுமின்றி பாத்திரம் வனைதல்

கொல்லர் வேலை, தச்சுவேலை, மரவேலை, நகை இழைத்தல், நெசவு போன்ற தொழில்களும் சாதியடிப்படையில் காத்து வளர்க்கப்பட்டன. இது குலவித்தை எனப்பட்டது . எமது பிரதேசத்திலே பாரிய உற்பத்தி நிறுவனமான ஆடைத்தொழில்ற்சாலை இயங்கிவருகிறது. மற்றும் அலுமாரி கம்பனியும், நிக்கல் கம்பனியும் முன்னர் இயங்கியதாக கூறப்படுகிறது.

எம்மக்களிடையே காணப்பட்ட இலக்கியங்களாக சிறுகதை கவிதை, கட்டுரை, கூத்து, நாடகம் போன்றவற்றை குறிப்பிடலாம். சிறுகதை எழுத்தாளர்களாக ஹெட்டி ஆராய்ச்சி மெத்தியேஸ், திரு. மு. தவராஜா, முத்துமாதவன், சபா சிறீதரன் போன்றோரையும் கவிதையடிப்படையில் ஸ்ரீதர், கல்யாணி, முத்துமாதவன் போன்றோரையும் குறிப்பிடலாம். கட்டுரையாக்கத்தை பொறுத்தமட்டில் முத்துமாதவனைக் குறிப்பிடலாம். நாடகப்பிரதியாக்கத்திலே முத்துமாதவன், மெத்தியேஸ் போன்றோரையும் குறிப்பிடலாம். இங்கு நாட்டுக்கூத் துக்காளக சயந்தன்கூத்து, இராமர்கூத்து, கிசகன்சங்காரம், மதுரவாசகம் போன்றன ஆடப்படுகிறது, மற்றும் நூல்வெளியீடுகளாக செவ்வாழை, புத்தொளி, கலாசார மலரான இளம்பரிதி போன்றனவும் குறிப்பிடலாம். மற்றும் தற்போது இலக்கிய எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் வண்ணம் 'இலக்கியா' இதழும் வெளிவருகிறது.

இலக்கியம் தவிர வைத்தியம் (மனித வைத்தியம், மிருக வைத்தியம், விஷவைத்தியம்) சோதிடம், மாந்திரிகம், கப்பல்கட்டும்கலை, கூத்துக்கலை, நகைத்தொழில் பற்றிய பல செய்திகள் மட்டக்களப்பு நாட்டார் நுல்களில் காணப்படுகின்றன. வைத்தியம் சம்பந்தமான வாகடங்கள் ஏட்டு நூல்களாக இன்றும் உள்ளன. மணிமந்திர ஔஷதங்கள் மூலம் விஷத்தை இறக்கிச் சுகம் பெறச்செய்யும் பல வைத்தியர்களும் வைத்திய நூல்களும் இன்னும் உள்ளன. சுதேச மிருக வைத்தியர்களும் உள்ளனர். நாட்டுப்புற மருத்துவர்கள் மருத்தவ முறைகளை இன்னும் இரகசியமாகப் பேணிப் பாதுகாக்கின்றனர்.

கலைகளை நோக்கும் போது ஓவியக்கலையை பாடசாலைகள் ஆலயங்கள் பொதுவிடங்களில் காணலாம். சமயச்சார்பு கலைகளில் காவடியாடுதல், தீ மிதித்தல் போன்றவற்றினை இப்பிரதேசத்தில் காணலாம். அத்தோடு கைவினைப்பொருள் உற்பத்தியும் இப்பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படுகிறது. அத்தோடு நடனக் கலையை நோக்கும்போது பாடசாலையில் ஒரு பாடமாக இக்கலை வளர்க்கப்படுவதுடன் பொதுவான கலையரங்கு நிகழ்வுகளிலும்

நடனக்கலை பிரபல்யம் பெறுகிறது. இசைக்கலையை நோக்கும்போது பெரிதான வளர்ச்சி காணப்படாவிடினும் அண்மையில இப்பிரதேசத்தில் தோற்றம் பெற்ற ''சுப்பர் சக்தி'' இசைக்குழு இசைக்கலையை வளர்ப்பதில் வழிப்புணர்வு பெற்று இயங்கி வருவதனைக் காணலாம்.

இப்பிரதேசத்த்தில் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், தாலாட்டுப்பாடல் என்பன சிலசில இடங்களில் பின்பற்றப்படுவதை காணலாம். மரணவீடுகளில் இறந்தவரின் எட்டுநாள் சடங்குமுடியும் வரை '' எனும் வரலாற்று கதைப்பாடல் பாடப்படுவதனை நோக்கலாம்.

நெல் மக்களின் தேவைக்கு மேல் விளைவிக்கப்பட்டது. இதனால் சோறுகறியே பிரதான உணவு வகையாகும். அத்தோடு ஆறுகடல்களில் வாழும் மீன், நண்டு இறால் கவ்வாட்டி, மட்டி, கூனி முதலிய நீர்வாழ்பிராணிகளும் காடுகளிலிருந்து கிடைக்கும் மான், மரை, பன்றி போன்றவற்றின் இறைச்சியும் சேனைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடப்படடும் மரக்கறி வகைகள் மா, பலா. வாழை, தோடை எலுமிச்சை முதலிய கனிவகைகளும், பட்டிப்பட்டியாக வளர்க்கப்படும். மாடு, எருமை என்பவை மூலம் பெறப்படும் பால், தயிர் நெய் இறைச்சி என்பனவும் உணவாக பயன்படுத்தப்படுவதுடன் தென்னங்கள்ளையும் அக்கள்ளிலிருந்து வடிக்கப்படும். ''அரக்கு'' என்று அவர்களால் அழைக்கப்படும் சாராயத்தையும் அவர்கள் பருகி கழித்தார்கள். மேலும் இவர்களது உணவுப் பழக்கவழக்கங்களில் நாகரீக பண்பாட்டில் உணவுப் பழக்கவழக்க பேணுவோரும் உள்ளனர். எனினும் ஒரு சில கிராமிய பண்பாட்டை பின்பற்றும் மக்களும் உள்ளனர். இவ்வாறான மக்கள் காலையில் ''தண்ணிச்சோறு'' என்று குறிப்பிடப்படும் உணவும் சோற்றை கரைத்துக்குடிக்கும் வழக்கமும் உண்டு சேமிப்பின் அடிப்படையில் அரிசியினை கைபிடி அளவு எடுத்து சேமிப்பவர்களும்ம உள்ளனர்.

இப்பிரதேச மக்களின் விளையாட்டுக்களை எடுத்து நோக்கின் சிறார்கள் தொடக்கம் பெரியோர் வரை பல விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பிடத்தக்கதாக'' ''ஒளித்துப்பிடித்தல்'' (கண்ணாம்பூச்சி) ''ஆலாப்பறத்தல்'' ''புங்கும் புளியடி'', ''கிள்ளுப்புராண்டி'' 'கிட்டிப்புள்ள' கிட்டிப்புள்ளு'' கபடி, குண்டு விளையாட்டு, பிள்ளையார் கட்டை (கடைட்டைப்பந்து, கிளித்தட்டு நாயும் இறைச்சித்துண்டும் குளங்கரை, வார் போன்றவிளையாட்டுக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை.

இப்பரதேசத்தில் பின்பற்றப்பட்டு வருவதுடன் பாலர் பாடசாலைகளில் இன்னும் பயிற்றுவிக்கப்பட்டு வருவதனையும் காணலாம்.

அத்தோடு மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் பாடசாலைகளுக்கிடையில் கழகங்களுக்கிடையில் களியாட்ட நிகழ்வுகளின் போதும் நடைபெறுவதனை அவதானிக்கலாம். அவ்வகை விளையாட்டுக்களாக ஓட்டம், வலைப்பந்து கரப்பந்து, ஈட்டி, குண்டு, கிறிக்கட், மரதன் போன்றவற்றினை குறிப்பிடலாம்.

இப்பிரதேச ஊர்ப்பெயராய்வையும் மக்கட் பெயராய்வையும் நோக்கும்போது ஊர்களை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊரை வேறுபடுத்திக் காட்ட இப்பெயர்களை இட்டனர். என கூறலாம். சில பெயர்கள் காரணப் பெயர்களாகவும் வழங்கப்படுவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. உதாரணமாக கோறைப்பற்றுக்குள் அடங்கும் வாழைச்சேனை பேய்த்தாழை, சுங்கான்கேணி, கறுவாக்கேணி, புதுக்குடியிருப்பு, பாசிக்குடா, கற்குடா, நாசிவன்தீவு, கண்ணகிபுரம், கல்மடு, முறாவோடை கிண்ணியடி, கும்புறுமூலைவெம்பு போன்றன காரணப்பெயர்களாகும். எடுத்துக்காட்டாக சேனையில் வாழைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டதால் ''வாழைச்சேனை'' என்ற பெயரும் தாழை மரங்களில் பேய்கள் குடிகொண்ண்டுள்ளதாக நம்பப்பட்டதால் பேய்த்தாழை எனவும் ஊர்ப்பெயராய்வுகள் பழமை எச்சங்களாக இன்றும் மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கி நிற்கின்றன.

மக்கட் பெயராய்வை நோக்கின் மனித குலத்தில் பெயர் என்பது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மனிதர்களை மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட பெயர் ஒரு பிரதான குறியீடாக அமைகிறது. இப்பிரதேசத்தில் பல்லின மக்களும் தங்களை வேறுபடுத்திக்காட்ட தமது சமய, மொழி, மத பண்பாட்டிற்கேற்ப பெயர்களை இடுகின்றனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்கும் போது கோறளைப்பற்று பிரதேச நாட்டாரியல் கூறுகளில் பிரதிபலிப்புக்கள் சிலவற்றினை கொண்டு இப்பிரதேச வளர்ச்சியில் அது எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்துகிறது எனவும் அவற்றின் வளர்ச்சிப்போக்கினையும் அறியக்கூடியதாக உள்ளது.

செல்வி. சாமித்தம்பி அனுஜாரதி, தரம் 11L
மட்./ வாழைச்சேனை இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.

*உசாத்துணை நூல்கள்*

1. மட்டக்களப்பு நாட்டாரியல் - வ. சிவசுப்பிரமணியம்
2. இளம்பரிதி - நாட்டார் வழக்காற்றில் ஓர் அறிமுகம்



# தமிழர்களின் பாரம்பரிய சுதேச விளையாட்டுக்கள்

சுதேச விளையாட்டுக்கள் ஈழத்தில் சகல இனமத மொழி மக்களினாலும் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்புவரை சிறுவர்கள் ஏராளமான விளையாட்டுக்களைத் தொடர்ந்து விளையாடி வந்தனர். அந்த வகையில் சுதேச விளையாட்டுக்காக நாம் பின்வருவனவற்றை குறிப்பிடமுடியும். ஒளித்துப்பிடித்தல் (கண்ணாம்பூச்சி), ஆலாப்பறத்தல். பூசணிக்காய் இழத்தல், புங்கம்புளியடி, அத்தோசை, கிள்ளுப்புறாண்டி, நொண்டி அடித்தல்., வார், கிட்டி விளையாட்டு, தும்பி விளையாட:டு, கண் பொத்தி விளையாட்டு, ஆடுபுலி விளையாட்டு, தெப்ப விளையாட்டு, தட்டுகோடு (கிளித்தட்டு), கட்டைப்பந்து (பிளையார் கட்டை), சில்லிக்கோடு (மாங்கொட்டை அடித்தல்) கவடி (சடுகுடு), பல்லாங்குழி. குண்டுவிளையாட்டு, மட்டைப்பந்து. முதலிய விளையாட்டுக்கள் இன்னும் முற்றாக மறக்கப்பட்டு விடவில்லை. இவ்விளையாட்டுக்களுக்கு பெரி மைதானங்களோ உபகரணங்களோ வேண்டியதில்லை கிராமங்களிலும் நகரங்களிலும் வீடுகளுக்கிடையே உள்ள வெளியான நிலங்களும் வீட்டு முற்றங்களும், கோயில் வீதிகளும், தெருக்களும்கூட விளையாட்டுக் களங்களாக அமைந்திருக்கும். விளையாட்டு உபகரணங்கள் கூட மிக எளிமையாக இருக்கும். மேற்குறிப்பிட்ட சுதேச விளையாட்டுக்களில் சிலவற்றை நோக்குவோம்.

## ஒளித்துப்பிடித்தல் அல்லது கண்ணாம்பூச்சி

சிறுவர்கள் மிக விரும்பும் விளையாட்டு "ஒளித்துப்பிடித்தல்" ஆகும். இதனை கண்ணாம்பூச்சி என்றும் கூறுவர் குழந்தைகள் தம்முள் ஒருவரை வீட்டிடுலுள்ள அலுமாரியின் பின்னாலோ தொங்கும் மேசை விரிப்புடைய மேசைக்குக் கிழோ மற்றக் குழந்தைகள் பார்க்கும்படி ஒளித்து வைப்பர் பின் எல்லேருக்கும் வெளியேறுவர் சிறிது நேரம் செல்ல ஒளிந்திருக்கும் குழந்தை தம்மை கண்டு பிடிக்க வரலாம் என்பதை குறித்து ஓர் ஒலியை எழுப்புவான். குழந்தைகள் கும்பலாக வந்து ஒளிந்திருப்பவரை தேடிப்பிடித்து கொள்வார்கள். பின் வேறொரு குழந்தை ஒளிந்து கொண்டு மீண்டும் தேடலும் கண்டுபிடித்தலும் சிரிப்பும் ஆரவாரமுந்தான் திரும்பத் திரும்ப அதையே செய்வதில் இந்த குழந்தைகளுக்கு பேரின்பம் குழந்தைகள் விளையாட்டில் வெற்றி தோல்வியைப் பற்றி அக்கறை கொள்வதில்லை அதிலுள்ள

ஆனந்தத்தையே நாடுகிறார்கள். இக் கண்ணாமூச்சி விளையாட்டு உலகத் குழந்தைகளுக்கே பொதுவான விளையாட்டு.

## தும்பி

சுதேச விளையாட்டுக்கள் அருகிக்கொண்டு போனாலும் ஒரு சில சிற்றூர்களில் இப்போது காணப்படும் விளையாட்டு ''தும்பி'' விளையாட்டாகும். இது நல்ல நிலவு வெளிச்சம், வீட்டு வாசல் முற்றம், வெள்ளை மணல் பரவப்பட்ட இடங்களில் விளையாடப்படுகின்றது. கிராமங்களில் இத்தகைய விளையாட்டுக்களில் பத்துப் பணிரெண்டு வயதுப் பிள்ளைகள் ஆண் பெண் என்ற பேதமின்றி கலந்து விளையாயாடுவர் வட்டமாக் கூட நின்று சப்பணிகோலி உட்கார்ந்து கைகள் இரண்டும் தமது பின்பக்கமாகக் கட்டிய வண்ணம் ஒரு சிறங்கை மண்ணையோ எதையே பெறுவது போன்றே வைத்திருப்பர் தும்பி வைத்துக்கொண்டு சுற்றிச்சுற்றி ஓடி வருவள் பாடுகிறாள்

தும்பியடி தும்பி தும்பியடி தும்பி
துணியடி மணியடி வேளையடி...........

தும்பியை ஒருவன் கையில் பட்டுப் படாமலும் தெரியாத வகையிலே போட்டு விட்டு வளைந்தோடுகிறான் தும்பியில்லாமல் பாடி ஒடிவளைப்பதைக் கண்டதும் அவராவர் கைகளால் பின்பக்கம் தடவிப் பார்க்கின்றனர். திரும்பிப் பார்க்ககூடாது தும்பி போடப்பட்டவன் கையிலெடுத்துக்கொண்டு தும்பி போட்டவன் தனது இடத்துக்கு வருமுன்பே எடுத்து:க்கொண்டோட அவனைப்போல் பாடி ஓடவேண்டும் இல்லையேல் தும்பி போட்டவன் தண்டணைக்கு ஆளாகவேண்டும்.

தும்பி போட்டப்பட்டவன் சுற்ற வந்து தும்பி எடுத்து ஒடுவான் ஆக அந்த இடத்திலே தும்பிபோட்டவன் உட்கார்ந்து கொண்டு அவர்களைப்போல் கைளை வைத்துக்கொண்டிருக்கவேண்டும். தும்பி எடுத்தவன் பாடி ஒடுகின்றான் தருணம் பார்த்து விரும்பியவர்க்கு தும்பியைப் போடுவான் பாடுவான் ஏட்டிக்குப் போட்டியாக இருக்கும்.

## அத்தோசை

''அத்தோசை'' என்பது ஒரு விளையாட்டு புங்கம் புளியடி விளையாட்டைப் போலவே அத்தோசை விளையாட்டையும் இருவர் இருவராக எத்தனை பேரும் விளையாடலாம். இது இருந்து ஆடும் ஆட்டம் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் நிலத்தில் அமர்வர். ஒருவர் தன் கைளை கூப்பி எதிரில் இருப்பவருக்கு முன்னால் நீட்டிப்பிடிப்பர் மற்றவர் கூப்பியகைக்கு அடிக்கும்போது முன்னவர் தமது ககைளை

உயர்த்தியோ தாழ்த்தியோ பக்கவாட்டில் அசைத்தோ அடிபடாமல் தனைக் காத்துககொள்வர். பிறகு இருவரும் ''மாறி ஆடுவார் இவ்வாறு அடிபடுவதும் அடியில் இருந்து தப்புவதும் தற்காப்புக் கலையின் ஆரம்பமாக அமைந்துள்ளது.

## கிட்டிப்புள்ளு

''கிட்டிப்புள்ளு'' இன்றும் சிறுவர்களால் ஆடப்படும் விளையாட்டு இதற்கு சுமார் 3 அடி நீளமான ஒரு தடியும் சுமார் 4 அல்லது 5 அங்குல நீளமான ஒரு தடித்துண்டும் போதுமானது பெரியதடி 'கிட்டி' என்றும் சிறிய தடி ''புள்'' (புள்ளு) என்றும் கூறப்படும். தரையில் ஒரு சிறிய பள்ளம் தோண்டி அதில் புள்ளை வைத்து உத்துவர் மறு கன்னையைச் (Team) யைச் சேர்ந்தவர்கள் அதனை ஊது பிடிப்பர் ஊது (Catch) எதிர் கன்னையைச் சேர்ந்தவர்ளால் ஊது பிடிக்கப்பட்டால் உத்தியவர் பட்டவராகக் கருதப்படுவார். (படுதல் Out) ஊது பிடிக்காவிட்டால் புள்ளிக் கிடக்கும் இடத்திலிருந்து அதனைக் குழியை நோக்கி எறிவர் மற்றவர் அடிப்பார் புள்ளு குழியிலிருந்து கிட்டியின் நீளத்திற்கு குறைவான இடத்தில் விழுந்து கிடந்தாலும் உத்தினவர் பட்டவராகக் கருதப்படுவார்.

அடித்து விட்டாரானால் குழியிலிருந்து கிட்டியால் அளப்பர். அந்த எண்ணிக்கையை மனதில் வைத்துக்கொண்டு தொடர்ந்த விளையாடுவர் எல்லோரும் பட்டுவிட்டால் மற்ற கன்னை (Team) ஆகும். அவர்களும் விளையாடிப் பட்டுப்போனர் யார் அதிகம் புள்ளி பெறுகிறார்களோ அவர்கள் பாட்டம் அடிக்கத் தொடங்குவர் வெற்றி பெற்ற கன்னையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் மும்மூன்று முறை கிட்டியினால் புள்ளை அடித்துக் கொண்டு முன்னேறுவர் இக் காரணத்தால் தெருக்கள் தான் இவ்விளையாட்டுக்குப் பொருத்தமான இடமாகின்றன.

அடித்து முடிந்ததும் அங்கிருந்து தோற்றகன்னையர் ஒவ்வொருவராக மூச்சு விடாது ஓடிவருவர் இதனைப் ''பாட்டம்'' என்பர். மூச்சு விடுகிறாரோ இல்லையா என்பதை அறிவதற்காக ஓடி வருவர் பாடிக்கொண்டுவரவேண்டும். அவ்வேளையில் பாடப்படும் பாட்டு பின்வருமாறு அமையும்.

ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்........

இவ்வாறு மூச்சுப் பிடித்துப் பாடிக்கொண்டு ஓடுவதால் உடல் உறுப்புக்கள் யாவும விருத்தியுறுகின்றன ஓட்டத்தோடு மூச்சுப் பிடித்தல் இரட்டிப்பினை

கொடுக்கும்.

**கண்பொத்தி விளையாட்டு/ கீச்சிமாச்சு தம்பலம்**

சிறுபாலர், ஆண், பெண், பேதமின்றி விளையாடும் விளையாட்டே ''கண்பொத்தி விளையாட்டு'' இவ்விளையாட்டை ''கீச்சி மாச்சித் தம்பலம்' என்றும் கூறுவர் இதற்கு இரண்டு பேர் கூடினாலே போதுமானது சில வேளைகளில் நாலைந்து சோடிகளைச் சேர்ந்த அக்கம் பக்கமிருந்து வெவ்வாறாக விளையாடுவர் இந்த விளையாட்டில் நான்கு படிமுறைகள் உண்டு.

1. குச்சி மிதித்தெடுத்தல்
2. கண் பொத்திக்கொண்ட செல்லுதல்
3. கொண்டு வைத்த குச்சியைக் கண்டெழுத்தல்
4. குச்சி கண்டு பிடியாவிட்டால் மீண்டும் கண்பொத்திப்பிடித்தல்

இருவர் சேர்ந்து நல்ல மணல் தரையில் இரண்டு முழமணலில் இடைவெளி விட்டு எதிர் முகங்காட்டி சப்பாணங்கோலி உட்கார்ந்து கொள்வர். இடைவெளியிலுள்ள மணலைச் சேர்த்துக்குவித்து முக்கோண வரம்பு போன்று அமைத்து குச்சி மறையக் கூடிய நிலையில் ஆக்குவர்.

குச்சி என்பது பெரும்பாலும் ஈர்க்கிலாகத்தான் இருக்கும் அல்லது சிறு குச்சி தடியாய் இருக்கலாம் முக்கோண வரம்பு மணலுக்குள் மறைக்கக்கூடிய அளவில் இரண்டு மூன்ற அங்குல நீளங்கொண்டதாக்க குச்சி இருக்கும். கண்ணால் பார்த்திருக்கும் போதே குச்சி தந்திரமாக மண்ணுக்குள் மறைத்துவைக்கப்படம். இருவரில் ஒருவர் பேசிகொண்டபடி குச்சி விளையாட்டைப் பாட்டோடு ஆரம்பிப்பர்.

முக்கோண வரம்பு மணலின் கை எட்டக்கூடி இரண்டு அந்தங்களிலும் உட்கார்ந்திருப்போரில் குச்சி வைப்பரே பாட்டைப்பாடி குச்சியை ஒளித்து வைப்பர் அப்பாடலானது பின்வருமாறு அமையும்.

ஈர்க்கி ஈர்க்கித் தம்பலம்
ஈயா மாயாத் தம்பலம்
கீச்சி மாச்சுத் தம்பலம்......

இவ்வாறே பாடிக்கொண்டு குச்சியை இரண்டுகைப்பெருவிரல் சுட்டு விரல் களைக்கொண்டு பிடித்துக்கொண்டே முக்கோண வரம்பு மணலுக்குள்ளே ஓரிடத்தில் வெளியே தெரியா வண்ணம் ஒளித்து வைப்பர் வைத்தாலும் வையாதமாதிரி மேலும் பாவனை காட்டி ஏமாற்றம் அடையர் செய்வர் . பாட்டைப்பாடிக்கொண்டே நிறுத்தி இப்போது ''குச்சியைக் கண்டெடு'' என்று கட்டையிடுவர்.

குச்சி எடுப்பவர் தனது இரண்டு கைவிரல்களையும் ஒன்றுக்குள் ஒன்றாக ஒட்டி இணைத்து அப்படியே இரண்டு கைகளாலும் குச்சி இருக்கும் இடமென்று எண்ணியவிடத்தலே அமர்ந்துவர் ஓரிடத்தில் அமர்த்தினால் அங்கிங்கென்று அசைக்கக்கூடாது குச்சி அதற்குள்ளே இருக்குமென்றால் மற்வர் சரி என்று ஒப்புக்கொண்டு குச்சியை எடுக்கும்படி சொல்வர். இல்லையேல் குச்சி வைத்தவர் குச்சியை எடுத்துக் காட்டிப் பின்பும் விளையாட்டை ஆரம்பிப்படிர்.

குச்சியை எடுக்கவேண்டியவர் சரியாகக் கைகளால் பொத்தி எடுக்கும் வரை குச்சியை வைப்பவர் பாட்டைப் பாடி வைத்துகொண் டேயிருப்பர். இப்படியாக நடைபெறுகையில் குச்சிகண்டெடுக் கப்பட்டால் பின்பு அவர் குச்சி வைப்பவராக மாறிவிடுவர். இல்லையேல் இரண்டொரு தடவையின் பின் குச்சி கண்டெடுக்காதவர் தண்டனைக் குள்ளாவது போன்று கண்பொத்தப்படுவர்.

கண்பொத்துதல் குச்சியைத்து விளையாடிய இடத்திலிருந்த ஆரம்பமாகும். கண்பொத்த முன்பே விளையாடிய குச்சியை இரு சிறங்கை மண் அள்ளி கைகளை இணைக்க குச்சிக்காரர் அதிலே குத்திவைத்துவிட்டுக் கண்களைத் தனது இரண்டு கைகளாலும் பொத்தி கொண்டு பின்பக்கமாகச்செல்வர். செல்லும் போது குறுக்கும் நெடுக்கும் அங்குமிங்கும் மூலைமுடுக்கெல்லாம் கண்பொத்தியவர் வழிநடத்திசெல்வர் கண்பொத்தும் கைகளாலே திசைகாட்டும் வண்ணம் குச்சிகொண்டு செல்பவர் முகத்தைத் திருப்பித் திருப்பி வழிநடத்துவர் இந்த வேளையிலும் பாட்டு வினாவிடையாக நடைபெறும் கண்பொத்தப்பட்டவரின் கண்கள் தெரிகின்றன வா என்று அறியவே இப்பாடலை பாடுவர்.

எவெடம் ? எவெடம் ?
புங்கம் புளியடி
எவெடம் ? எவெடம் ?

வினாவும் பொத்தப்பட்டவரின் விடையும் மாறிமாறி நடைபெறும் சில குறிப்பிட்ட இடங்களில் ''இது எந்த இடம்'' என வினவே மறறவர் சரியான இடத்தைச் சொன்னால் கண்தெரிகிறது என்றெண்ணிக்கொண்டு கடுமையாகக் கைகளை இறுக்கமாகப் பொத்துவர். குச்சி விளையாட்டிலே குச்சியைக் கைபொருத்திக் கண்டெடாதவர். இப்போது இப்படிக்கொண்டு கொண்டு சென்று வைக்கும் குச்சியைக் கண்பொத்தாமல் விட்டதும் கண்டெக்க வேண்டும் குச்சியைக் கொண்டு வைத்துவிடு விளையாட்டு ஆரம்பமான இடத்திலேய திருப்பி வந்து கண் பொத்துதலை விடுவர்.

கண்பொத்தப்பட்ட வேதனையால் சிறிது நேரம் தயங்கியே குச்சி வைத்த இடத்தைத் தேடியும் போவர் அங்குமிங்கும் அலைமோதவைத்து

இரண்டு மூன்று வீடுவளவுகள் தாண்டியும் குச்சி கொண்டுவைக்கப்படும். கொண்து வைத்த குச்சியை கண்டெத்தவர் குசாலாக ஓடிவந்து விளையாட்டை ஆரம்பிப்பர் இவ்வாறே இவ்விளையாட்டு விளையாடப்படுகிறது.

## "வார்"

"வார்" விளையாட்டு வேகமாக ஓடும் பயிற்சியை அளிக்கும் ஓர் விளையாட்டாக அமைகின்றது சுமார் அறுபது அல்லது எழுவது யார் இடைவெளித் தூரத்தில் ஒரு அந்தரத்தில் ஒரு கன்னையும் (Team) மறு அந்தரத்தில் மறு கன்னையும் நிற்கும். ஏதாவது ஒரு கன்னையைச் சேர்ந்தவரில் ஒருவர் மறு கன்னைக்குச் சென்று அங்கு நிற்கும் ஒருவரின் நீட்டப்பட்ட கையைத் தொட்டுக்கொண்டு நிற்பார். பின் கையை எடுத்து விட்டு தமது கன்னையை நோக்கி ஓடுவார். மற்றவர் அவரைத் துரத்திச் செல்வார். இவ்வாறு துரத்தி வருபவரை அடிப்பதற்கு மறு கன்னையிலிருந்து ஒருவர் ஓடிவருவார் யாராவது அடிப்பட்டால் அவர் மற்றக் கன்னையரின் கைதி ஆகிவிடுவார் அடித்தவர்கள் தமது கன்னைக்குச் சிறிது தூரத்தில் இவரை நிறுத்தி வைப்பர். இவரை விடுவிக்கவேண்டுமென்றால் இவரது கன்னையைச் சேர்ந்த ஒருவர் எதிரிகளால் அடிபடாமல் இவரை வந்து தொடவேண்டும். அடிப்பட்டால் அவரும் கைதியாகி விடுவார். முந்தி வருபவரை பிந்தி வருபவர்தான் அடிக்கவேண்டும். பிந்தி வருபவரை அடிக்க எதிர்க்கன்னையிலிருந்து அவருக்குப் பின் ஒருவர் புறப்பட்டு வரவேண்டும். இப்படி பலர் ஆடுகளத்தில் புகுந்து விளையாடுவதால் குழறுபடிகள், தர்க்கங்கள் ஏற்படுவதுண்டு சிறிது நேரத்தில் சமாதானஞ்செய்து கொண்டு மீண்டும் விளையாட்டைத் தொடர்வது குழந்தை விளையாட்டுக்குப் பொதுவான சிறப்பம்சமாக இவ் விளையாட்டு காணப்படுகிறது.

## பிள்ளையார் கட்டை

"பிள்ளையார் கட்டை" இவ்விளையாட்டினை ஆடுவதற்கு இரு புறமும் சமமான தூரத்தில் இடத்தை அமைத்து விட்டு இரு கன்னைகளாகச் (Team) பிரிந்து விளையாட்டை ஆரம்பிப்பர் பந்தினால் கட்டைக்கு எறிந்து அதனை வீழ்த்த முயல்வர் கட்டை வீழ்த்தப்பட்டால் மறு கன்னையர் அதனை மீண்டும் நிறுத்தி ஓட்டுச் சில்லுகளை அதன்மேல் அடுக்கவேண்டும் அப்பொழுது கட்டையை வீழ்த்திய குழுவினர் பந்தால் எறிந்து சில்லுகளை அடுக்கிவிடாமல் தடுப்பர். சிலர் பந்தெறிக்குப் பயந்து ஓடி விடுவதும் உண்டு. சிலர் குனிந்தும் துள்ளியும் பந்தடிபடாமல் விலக்கிக்கொண்டு கட்டையை நிமிர்த்தி ஓட்டுச் சில்லுகளை அடுக்குவர்.

அடுக்கி முடிந்து விட்டால் விளையாட்டு நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கும். கட்டையை அடுக்கிக் கொண்டிருக்கும்போது எறிபவர்களுடைய பந்து கட்டையில் பட்டு அடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சில்லுகளில் ஒன்றாவது விழுந்து விட்டால் விளையாட்டின் நிலை தலைகீழாக மாறிவிடும். கணப்பொழுத்தில் சில்லுகளை அடுக்குபவர்கள் பந்தால் எறிந்து தடுப்பவர்களாக மாறிவிடுவர்.

## குண்டு விளையாட்டு

குண்டுவிளையாட்டு மிகப் பழமையான ஒரு விளையாட்டாக இவ் விளையாட்டுக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இது வாட்டல் எனப்படுகிறது. பிற்காலத்தில் கற்குண்டுகளின் வருகைக்கு முன்பு உருண்டையான வட்டுக்காய்கள் உபயோகிக்கப்பட்டமையால் இது வாட்டல் எனப்பெயர் பெற்றதாக தெரிகிறது. இதன் காரணமாக ''வட்டு என்பது ஒரு விளையாட்டின் பெயராகிவிட்டது. வட்டுக்காய்களுக்குப் பதிலாக உருண்டைான நெல்லிக் காய்களைத் கருவிகளாகக் கொண்டாடிய போதும் இவ்விளையாட்டை ''நெல்லி வட்டு'' என்றே குறிப்பிட்டனர்.

நேர்வரிசையாக மூன்று குழிகளைக் கல்லுவார்கள் ஒன்றுக்கொன்று இடைவெளி ஐந்தாறு அடிகள் இருக்கும். இதுவே வட்டாடும் அரங்கு இதில் கன்னை (Team) பிரித்து ஆடுவதில்லை ஒவ்வொருவரும் தனித்தனி ஆட்டக்காரராக இருப்பர். முதலில் ஒவ்வொருவரும் தமது குண்டை முதலாம் குழியருகில் நின்று மூன்றாம் குழியருகில் சுண்டி விடுவார். யாருடைய குண்டு குழிக்கு மிகவும் அருகில் கிடக்கிறதோ அவர் முதல் ஆடுபவராகவும் அடுத்த தூரத்தில் யாருடய குண்டு உள்ளதோ அவர் இரண்டாவது ஆட்டக்காகராகவும் மற்றவர் மூன்றாம் ஆட்ட்க்காரராகவும் விளையாடுவர் குழிக்குக் குண்டுகளைச் செலுத்துவதைக் கட்டுதல் என்பர்.

இனி முதல் ஆட்டக்காரர் முதல் குழியிலிருந்து நடுக்குழிக்குள் விழும்படி குண்டைச் சுண்டுவர் குண்டு குழியுள் விழுந்து விட்டால் இரண்டாம் குழியுள் விழும்படி சுண்டுவர். இப்படி யார் பத்து குழிகளைத் தாண்டுவாரோ அவர் விலகிக்கொள்வார்.

மற்ற இருக்கும் விளையாடுவர். அவர்களில் யார் பத்துக் குழிகளுக்குள்ளும் குண்டுகளைக் செலுத்துவாரோ அவர் விலகிவிடுவார் இப்பொழுது எஞ்சியுள்ளவர் தொடர்ந்து விளையாடுவதில்லை அவருக்குத் தண்டனை வழங்கப்படும்.

அத்தண்டனை மொட்டா. காவலா? என்பது விளையாட்டின் ஆரம்பத்தின் போதே தீர்மாளிக்கப்பட்டுவிடும். மொட்டு என்பது தோற்றவர் தமது கைவிரல்களில் நடுவிரலையும் மோதிரவிரலையும் மடித்துப் பெருவிரலை அவற்றின் மேல் மடித்து வைத்துக்கொண்டு மற்றிரு விரல்களை குழிஅருகில் குத்திக்கொண்டு குந்தி இருப்பார் மற்ற இருவரும் மூன்று முறை தமது குண்டினால் விரல் மொழியில் அடிப்பார். அடி மொழியில் விழுந்து விட்டால் விண்னென்று வலிக்கும் இதற்குப் பதிலாக ''காவல்'' என்ற தண்டனை கொடுக்கப்படுவதுண்டு. தோற்றவர் ஒரு குழியின் அருகில் குந்தி இருந்து கொண்டு தமது குண்டை நடுக்குழிக்குள் செலுத்தவேண்டும். குழிகுள் குண்டு விழவில்லை யாயின் குண்டை வென்றவர் எடுத்து வசதியான இடத்தில் வைத்து தமது குண்டால் சுண்டி அடிப்பார். தோற்றவர் ஒவ்வொருமுறையும் தமது குண்டை ஓடிஓடிப் பொறுக்கி வருவார். தூரத்திலிருந்த குழிக்குள் போடமுடியாததால் குண்டை தமக்கு வசதியெனக் காணுமிடத்தில் வைப்பார். வென்றவர் அதனைத் தமது குண்டினால் அடிப்பார். அடிபடாவிட்டால் தான் வைத்த இடத்திலிருந்து குண்டை நடுக்குழிக்குள் செலுத்துவார். குண்டு நடுக்குழிக்குள் விழும் வரை ''காவல்'' தொடரும் குண்டு குழியுள் விழுந்து விட்டால் ஆட்டத்தைப் புதிதாக தொடரலாம்.

தற்போது கண்ணாடிக் குண்டுகள் சந்தைக்கு வந்த பிறகு பழைய குண்டு விளையாட்டு கைவிடப்பட்டுள்ளது இப்போது இவ்விளையாட்டு வெற்றி பெற்று குண்டுகளை சேகரிப்பதற்காக ஆடப்படுகிறது. ஆட்ட முறைகளும் விதிகளும் மாறி இருப்பதனை காணமுடிகிறது.

### பூசணிக்காய் இழுத்தல்

பூசணிக்காய் இழுத்தல் என்பது சிறுவர்கள் விளையாடும் சிக்கலற்ற ஓர் விளையாட்டாகும். ஒருவர் வீட்டினிலுள்ள மரத்தின் ஒன்றின் முன் இருந்து அதனை இறுக்கிப் பிடித்துக்கொள்வார். அவருடைய வயிற்றை இன்னொருவர் சுற்றிப்பிடிப்பார். இவ்வாறு நாலைந்து பேர் தமக்கு முன்னால் இருப்பவரின் வயிற்றை இறுக்கமாகப் பிடித்துக்கொள்வர். இன்னொருவர் (ஒருவர் மட்டுந்தான்) இந்த வரிசையின் பின்னாலிருப்பவரின் இடுப்பைச் சுற்றி பிடித்து அவரை இழுத்து வெளியே எடுப்பார். பூசணிக் கொடியிலிருந்த ஒவ்வொரு பூசணிக்காய் பிடுங்குவதாக கற்பனை செய்து கொள்வார்கள். இவ்வாறே மாறி மாறி விளையாடுவார்கள்.

## கிள்ளிப் பிராண்டி

கிள்ளிப் பிராண்டி என்பது ஒரு விளையாட்டாகும். நாலைந்து பெண் குழந்தைகள் வட்டமாக அமர்ந்து தமது உள்ளங்கை நிலத்தில் படும்படி வைத்துக்கொள்வர். வேறொரு பெண் விளையாட்டை ஆரம்பிப்பார். பின்வரும் பாடலைப் பாடிக் கொண்டு மற்றவர்களின் புறங்கைகளை இலேசாகக் கள்ளிக் கொண்டு வருவார்.

கிள்ளிப் கிள்ளி பிறாண்டி
கீயா மாயா பிறாண்டி
கொப்பன் தலையில் என்ன பூ

என்பது பாடலின் தொடக்கமாகும் பாடலின் இறுதியில் பூ என்ற சொல் வரும் போது யாருடைய கையைக் கிள்ளினாரோ அவர் ஒரு பூவின் பெயரைச் சொல்வார். பெரும்பாலும் ஆரம்பத்தில் ''முருங்கைப்பூ" என்று சொல்லது வழக்கம் பின் பாடல் தொடரும்.

''முருங்கைப் பூசைத் தின்றவளே
பாதி விளாங்காய் கடித்தவளே
பாவட்டங் கைய மடக்கு"

'மடக்கு' என்ற சொல் ஒரே சொல் போலல்லாமல் ம....ட...க்...கு... என நான்கு சொற்கள் போல் உச்சரிக்கப்படும். 'கு' யாருடைய கையில் முடிவடைகிறதோ அவர் அக்கையை உள்ளங்கை வெளியில் தெரியும்படி நிமிர்த்தி வைப்பார். பின் பாடலும் கிள்ளுதலும் அடுத்தவர் கையிலிருந்து தொடரும் யாருடைய விரித்த கையில் கிள்ளு முடிவடைகிறதோ அவர் அக்கையை எடுத்து விடுவார். இவ்வாறு ஒருவருடைய கை மிஞ்சுமட்டும் விளையாட்டுத் தொடரும்.

## ஆடுபுலி விளையாட்டு

ஆடுபுலி விளையாட்டு என்பது ஆரவாரம் கொண்டு விளையாடப்படும் விளையாட்டாகும். இரண்டு பக்கம் என்றில்லை ஆட்டுக்கும் புலிக்கும் திராணிமிக்க திடகாத்திரமான உடலுடையோர் தெரிந்தெடுப்பார். தலை ஆடாகவும் புலியாகவும் கருதப்படுவார்.

தலை ஆடானவரைப் பின்பற்றி உயரமுறைப்படி பதினெட்டு இருபது அளவில் கோவைக்கொடி போன்று கொடுக்கும் கட்டிக்கொண்டு முதுகுப் பக்கம் முதுகுப் பக்கமாகப் பிடித்துக்கொள்வர்.

ஆடுபுலியும் விளையாட்டு சிறுவர் விளையாடுவர். வாலிபரும் விளையாடுவர். பாம்பு நெளிவது பொல் ஆடுகளின் வரிசை ஆட்டமுறும்போது ஆரவாரங்களும் உண்டாகும். புலிக்கு ஆடுவோர்

ஓட்டம் ஆட்டம் பாடலோடு உச்சநிலையில் இருக்கும் அப்பாடலானது.

என்றா டெங்கே?
உன்றா டில்லே!
என்றா டெங்கே?
உன்றா டில்லே

என்று ஏட்டிக்குப் போட்டியாக பாடும்போது ஆடு பிடித்தலில் புலிக்கும் ஆட்டைக் காப்பாற்றலில் தலை ஆட்டுக்கும் கண்ணுங்கருத்து மிகுந்திருக்கும். இப்பாடல் ஆடும் புலியும் மறித்தோடும் ஓசையும் கூடுதலாகிப் பார்ப்போரைப் பரவசப்படுத்தும் அனுமன்வால் மாதிரி பின்பக்க ஆடுகளை தலை ஆடு ஆட்டுவிக்கும் இப்படியான வேளையில் ஆடுகளின் பிடி தவறினால் அவர்களின் கடைசி வரி ஆட்டைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடுவிடும்.

பின்பும் புலிவந்து ஆடு பிடிக்க எதிர்து ஆடும், ஓடும், பாயும், ஆடுகளின் பிடி இறுக்கமாக இருக்கும் அப்படியிருந்தும் ஒட்டியான ஆட்டைப் புலி பிடித்து ஓடி ஓடியே ஆடுகளின் குறைத்து விடும். ஐந்தாறு ஆடுகள் குறைவுற்ற பின்பு ஆட்டின் வரிசை ஆட்டம் வலிமை கூடியதாக மாறும். அப்போது ஒட்டி ஒட்டி ஆடுகளைச் பிடிப்பதில் புலி வேகங்காட்டும். புலியின் வேகம் கண்ட மிகுதி ஆடுகள் வேகமாக ஓடி ஓடி தலை ஆட்டிலே மறையும் தலைஆட்டோடு சேர்ந்து உரத்த தொனியில் மிகுதி ஆடுகளும் பாடும் இனிமேல்தான் நாலைந்து ஆடுகளுடன் புலிக்கு வேகமான பாச்சலும் ஓட்டமும். சில வேளைகளில் ஆடுகளுக்கு மேலாயும் பாய்ச்சல் காட்டிப்புலி பயமுறுத்திப் இப்படியாகவே ஆடுகள் குறைந்து தலையாடும் புலியும் ஆடும் ஆட்டம் பெரியபோராட்டமாகும்.

மல்லுக்கட்டுதலும் இழப்பறிப்படுதலும் மல்யுத்தம் போலும் தென்படும் இவ்விளையாட்டினை மணல் வெளிகளிலும் நிலவொளிகளிலும் ஆடுவர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவ்விளையாட்டு குறைந்து வருகின்றது.

## குதிரைப் பந்து

சிறுவர்களால் ஆடுடப்படும் விளையாட:டுக்களில் ஒன்று ''குதிரைப் பந்து'' ஐந்து அடி இடைவெளிவிட்டு இரண்டு செங்கற்களை வைத்து அவற்றின் மீது ஆறு அடி நீளமான ஒரு தடியை வைப்பர். இரு இடந்தைகள் அமைத்து அங்கிலிருந்து ஒவ்வொரு கன்னையரும் (Team) பந்தை எறிந்து கம்பை வீழ்த்த முயல்வா். ஒவ்வொரு கன்னைக்கும்

ஒரு எறி வீதம் மாற்றி மாறி எறிவர் கம்பை வீழத்தி விட்டால் எதிர் கன்னையிலிருந்த ஒருவர் கால் கைகைகளை நிலத்தில் ஊன்றி குதிர போல் நிற்க மறு கன்னையிலருந்து ஒருவர் குதிரை மீது ஏறி இருப்பர் இந்தக் குதரையை மிட்க வேண்டுமானால் குதிரையின் கன்னையைச் சேர்ந்த ஒருவர் பந்தால் எறிந்து கம்பை வீழ்த்தவேண்டும் இவ்வாறும் விளையாட்டு தொடர்ந்து நடைபெறும்.

ஆண், பெண் பேதமின்றி சிறுவர்களால் விளையாடப்படும். விளையாட்டுக்களில் ''நாயும் இறைச்சித் துண்டும்'' குளம், கரை ''கிளித்தட்டு'' போன்ற விளையாட்டுக்களும் குறிப்பிடத்தக்கனவாக காணப்படுகிறது.

மேற்கண்ட தமிழர்களின் பாரம்பரிய சுதேச விளையாட்டுக்களை தொகுத்து நோக்கும்போது பண்டைய காலத்தில் இருந்தே இவ்விளையாட்டுக்கள் விளையாடப்பட்டு வருவதையும் தற்காலத்தில் இவ் சுதேச விளையாட்டுக்கள் அருகி வருவதும் கவலைக்குரிய ஒரு விடயமாக இருப்பதுடன் இவ் விளையாட்டுக்களே நவீன காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுக்களுக்கு ஆரம்ப அடிப்படையாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

## உசாத்துணை நூல்கள்


1. ''மட்டக்களப்பு நாட்டாரியல்'' - வ. சிவசுப்பிரமணியம் (B.A)

2. ''பாட்டும் விளையாட்டும்'' - கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி



ஆக்கம் :

திரு. க. இந்திரகுமார்,

விளையாட்டு உத்தியோகத்தர்,

பிரதேச செயலகம்,

கோறளைப்பற்று வாழைச்சேனை.

# மட்டக்களப்பு பிரதேச பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஒரு ஆய்வுக்கான கள அமைப்பு



கட்டுரையினை ஆரம்பிக்கமுன்னர் தெரிவிக்கப்பட வேண்டிய ஒரு சில விடயங்களினை கூறுவது பொருத்தமானது

அ. கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் மட்டக்களப்பில் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிய ஒரு ஆய்வுக்கான களஅமைப்புக் கட்டுரையாகவே இதனை எழுதமுற்பட்டடேன். இக்கட்டுரையின் பின்னர் இதுபற்றிய போதிய தகவலுடன் வெளிவரும் ஏனையவர்கள் கட்டுரைகள் எனது நிலைப்பாட்டிற்கு கிடைக்கப்பெற்ற வெற்றியாக கருதுவேன்.

ஆ. இவ்வகையில் இக்கட்டுரையை அடிப்படையாக மட்டக்களப்புப் பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் முத்தமிழ் விழா இதழாகிய தேனகத்தில் 1993ம் ஆண்டில் கலாநிதி செ. யோகராசா எழுதிய மட்டக்களப்புப் பிரதேச சிறு சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம் எனும் கட்டுரையும் அதே பிரதேச செயலக தேனகத்தில் 1997ம் ஆண்டு அன்புமணி அவர்கள் எழுதிய மட்டக்களப்பில் மலர்ந்த சஞ்சிகைகள் எனும் கட்டுரையும் தமிழ் அலை வார இதழாகிய 25,26,27ல் அன்புமணி எழுதிய மட்டக்களப்புச் சஞ்சிகைகள் ஒரு கண்ணோட்டம் எனும் கட்டுயும் இரா. துரைரெத்தினம் தமிழ் அலை வார இதழாகிய 25ல் எழுதிய பத்திரிகை வரலாற்றில் பின்னே நிற்கும் மட்டக்களப்பு எனும் கட்டுரையும் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வித்தியாசிறப்பு இதழ் இரண்டில் கலாநிதி செ. யோகராசா எழுதிய மட்டக்களப்பு பிரதேச பாடசாலைச் சஞ்சிகைகள் எனும் கட்டுரையினையும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2003 ஆய்வரங்கக் கட்டுரைகளாகிய ஈழத்து இதழியலும் வரலாறும் மதிப்பீடும் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் பத்திரிகைத்துறையினை எடுத்துநோக்கும்போது இரா.துரைரெத்தினம் தமிழ்அலை வார இதழ் 25ல் யாழ்ப்பாணத்துடன் ஒப்பிடும்போது மட்டக்களப்பு பத்திரிகைத்துறை 50வருடங்கள் பின்நிற்பதாகவும் சமஅளவு (ஐந்து இலட்சம்) சனத்தொகையினைக் கொண்ட யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பத்திரிகை வாசிப்பு விகித

ஒப்பீட்டில் யாழ்ப்பாணத்தில் 59.7 வீதமாகவும், மட்டக்களப்பில் 13.7வீதமாகவும் காணப்படுவதுடன் பத்திரிகை விற்பனையில் யாழ்ப்பாணத்தில் சுதேச பத்திரிகைகளின் மொத்த விற்பனை 34000மாகக் காணப்பட மட்டக்களப்பில் 2000மாக இருப்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்மாவட்டத்தில் சுதேச பத்திரிகைகளாக உதயன், நமது ஈழநாடு, வலம்புரி, வலம்புரியின் வாரமலரான சங்குநாதம், ஈழநாதம் என்பன செல்வாக்குப் பெறுகின்றன. இவைதவிர தேசிய பத்திரிகைகளான வீரகேசரி , தினக்குரல், தினகரன், மித்திரன் போன்றவை செல்வாக்குப்பெறுவது குறிப்பிடத்தக்கது. யாழ் பிரதேச பத்திரிகைகள் அரசியல், சமுக, சமயச்செய்திகளையும், கல்வி வளர்ச்சிக்குரிய பணிகளையும் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்திரிகைத்துறை வளர்ச்சி அடைய மாவட்ட மக்கள் சுதேச பத்திரிகைகளுக்கு அதி முக்கியத்துவம் வழங்குதல்வேண்டும். அதற்கேற்ப அப்பத்திரிகைகளின் அம்மண்ணிற்குரிய சிறப்பான விடயங்களையும் சுமந்துவருதல்வேண்டும்.

இவ்வகையில் மட்டக்களப்பில் இதுவரை வெளிவந்த பத்திரிகைகளை ஆய்வுக்குதவும் வகையில் இயன்ற தரவுகளைக்கொண்டு ஆக்கப்படும் இக்கட்டுரை தவறுகளிருப்பின் அதனை தொடர்கட்டுரையாளர்கள் சீர்திருத்தம் செய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மட்டக்களப்பில் இதுவரை வெளிவந்த பத்திரிகை விபரங்கள் வருமாறு

### 1. மாணவன்

1890ம் ஆண்டு திரு. எம்.எஸ். பாவா என்பவரை ஆசிரியராகக்கொண்டு கிறிஸ்தவ பிரசார பத்திரிகையாக வெஸ்லியன் மிசனரி மட்டக்களப்பு எனும் முகவரியிலிருந்து வெளிவந்தது.

### 2. கிழக்குத் தபால்

இரா. துரைரெத்தினம் அவர்கள் (தமிழ் அலை வார இதழ் 25ல்) 1932ம் ஆண்டு வெளிவந்த தெனவும், அன்புமணி அவர்கள் (தேனகம் 1997ம் ஆண்டு) 1940ம் ஆண்டு வெளிவந்ததெனவும் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் ஆசிரியர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை

### 3. தீபம்

1942ம் ஆண்டு வேதநாயம் பாதிரியினை ஆசிரியராக்கொண்டு வெளிவந்தது.

### 4. உதயம்

எஸ். ரி. சிவநாயகம் ஆசிரியராகக்கொண்டு 1942ல் வெளிவந்தது.

### 5. திலகம்

அகமட் சாலியினை ஆசிரியராகக்கொண்டு 1970ம் ஆண்டு வெளிவந்தது.

### 6. கொண்டல்

வி.சு. கதிர்காமத்தம்பி, வர்ணகுலசிங்கம் ஆகியோரினைக்கொண்டு 1990ம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு வெளிவந்தது.

### 7. மருதம்

1990களின் பின் சு. கமலன் என்பவரால் எல்லைநகர் ஏறாவூர் 4ல் இருந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### 8. விடிவானம்

வி.சு. கதிர்காமத்தம்பி பின்னர் இரா. துரைரெத்தினம் ஆசிரியராகப் பணியாற்றினர். 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை மாதம் இருமுறை வெளிவந்தது. என இரா. துரைரெத்தினம் தமிழ் அலை வார இதழ் 25ல் சுட்டிக்காட்ட அதே பத்திரிகையின் 27ம் இதழில் வாரப் பத்திரிகையாக வெளிவந்ததென திரு அன்புமணி சுட்டிக்காட்டுகின்றார்.

### 9. தினக்கதிர்

1995ம் ஆண்டு வார மலராக ஆரம்பிக்கப்பட்டு 99ம் ஆண்டு தினசரி பத்திரிகையாக வெளிவந்தது. 2001ம் ஆண்டு நின்றுவிட்டது

### 10. தென்றல்

2000ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து மாதாந்த பத்திரிகையாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### 11. வீசுதென்றல்

2000ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பற்றிமாகிரிலேனை அலுவலக முகவரியாகக்கொண்டு மாதாந்தப் பத்திரிகையாக வெளிவந்தது.

### 12. தமிழ் அலை

2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 25வராத இதழ்களின் பின்னர் தினசரிப்பத்திரிகையாக வெளிவந்தது

### 13. ஈழநாதம்

2004 தமிழ் அலை தற்போது ஈழநாதம் (மட்டக்களப்புப் பதிப்பு) என பெயர் மாற்றம் பெற்று வெளிவருகின்றது.

### 13. ஏனைய பத்திரிகை பற்றிய குறிப்பு

செ. இராசதுரை அவர்கள் தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக லங்கா முரசு, தழிழகம் எனும் பத்திரிகைகளை நடாத்தியதாக செய்திகள் உள்ளன.

சஞ்சிகை வரலாற்றினை ஆவணப்படுத்த முயலும் வேளையில் அவற்றினை விடயஇலகு கருதி கீழ் வருமாறு வகைப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

*. தனியார் சஞ்சிகை
*. கல்வி ஸ்தாபனச் சஞ்சிகைகள்
*. பிரதேச செயலக சஞ்சிகைகள்
*. உள்ளுராட்சி திணைக்களச் சஞ்சிகைகள்
* அரசசார்பற்ற திணைக்களச் சஞ்சிகைகள்
* கூட்டுறவு சங்க சஞ்சிகைகள்
* காகித ஆலைச் சஞ்சிகை

## * தனியார் சஞ்சிகை

### 1. பாரதி

அன்புமணியின் கருத்துப்படி 1947ம் ஆண்டு எனவும் இரா. துரைரெத்தினம் அவர்களின் கருத்துப்படி 1950ம் ஆண்டு எனவும் கருதப்படும். இச்சஞ்சிகை ஆசிரியர் திரு. என். செபரெத்தினம் இது மாதந்தோறும் வெளிவரும் சஞ்சிகையாகும். கொழும்பு சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது மண்டூரினை அலுவலகமாகக்கொண்டது.

### 2. பாடுமீன்

1960ம் ஆண்டு நீலாவாணனை ஆசிரியராக்கொண்டு வெளிவந்த மாத இதழ்

### 3. தலைவன்

1969ம் ஆண்டு பி.வி. கந்தையா மூலம் வெளியிடப்பட்ட மாத இதழ்

### 4. தொண்டன்

அன்புமணி அவர்களால் தமிழ் அலை 1969ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சஞ்சிகையெனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதே அன்புமணி அவர்களால் மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவை ''தேனகம்'' எனும் இதழில் (1997ம்) ஆண்டு 1970என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரா. துரைரெத்தினம் மூலம் 1971ம் ஆண்டு என சுட்டிக்காட்டப்பட்டுள்ள இச்சஞ்சிகை மாத இதழாக மலர்வதுடன் இதன் ஆசிரியர்கள் மாற்றம் அடைவதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்படும் இச்சஞ்சிகை தொடர்பு முகவரியாக சமூகத்தொடர்பு நிலையம் அஞ்சல்பெட்டி 4, மட்டு. திருமலை ஆயர் இல்லம், மட்டக்களப்பு எனக் காணப்படுகின்றது.

### 5. மலர்

1970ம் ஆண்டு ஜனவரி மாதம் இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்களால் மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அலுவலக முகவரியாக இல.21, மத்தியவீதி, மட்டக்களப்பு பயன்படுத்தப்பட்டது.

### 6. தாரகை

1981ம் ஆண்டு மாத இதழாக மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்த சஞ்சிகையின் ஆசிரியர் கண. மகேஸ்வரன் அலுவலக முகவரியாக பாத்திமாகிரிலேன், மட்டக்களப்பு பயன்படுத்தப்பட்டது. தற்போதைய தொடர்புகளுக்கு இல.18/7, தர்மலிங்கம் லேன், மட்டக்களப்பு என்பதை பயன்படுத்தமுடியும்.

### 7. களம்

1983ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின் நின்று 1996ம் ஆண்டு மீண்டும் வெளிவந்த காலாண்டு இதழ்

### 8. சுமைதாங்கி

1983ம் ரி. பாக்கியநாகயம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு

கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட கிறிஸ்தவ சஞ்சிகை இது. முகவரியாக இல.83, திருமலை வீதி, மட்டக்களப்பு காணப்படுகின்றது.

## 9. வயல்

கவிஞர் சாருமதியை ஆசிரியராகக்கொண்டு புனித செபஸ்தியார் அச்சகமூலம் வெளியான இச்சஞ்சிகை விபுலானந்தா வெளிவாரி பட்டப்படிப்புக் கல்லூரி முகவரியினை அலுவலகமாகக்கொண்டது.

## 10. பிரணவம்

1990 களின் பின் கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயத்தை கருமபீடமாகக்கொண்டு வெளிவந்த முற்றுமுழுதான் இந்துமத இதழ் இவ்விதழ் நின்றுவிட்டமை கவலைக்குரிய விடயமே.

## 11. படி.

1993ம் ஆண்டு வெ. தவராசா என்பவரை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்தது. மேலதி விபரங்களுக்கு வெ. தவராசா பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ஓட்டமாவடி எனும் முகவரியினை பயன்படுத்தமுடியும்.

## 12. சுவைத்திரள்

1993ம் ஆண்டு முதல் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் என்பவரால் வளர்மதி அச்சகத்திலும் பின்னர் பல்வேறுபட்ட அச்சகங்களில் அச்சிடப்பட்டு வெளிவருகிறது. அலுவலக முகவரியாக இல. 481, பார் வீதி, மட்டக்களப்பு காணப்படுகின்றது. 19சஞ்சிகைகள் வெளிவந்தமையுடன் 1900ம் பிரதிகள் விற்பனைக்கு உள்ளாக்கப்பட்டன.

## 13. கவிதேசம்

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் என்பவரால் காலாண்டு கவி இதழாக வெளியிடப்பட்டது.

## 13. பூவரசு

1994ம் ஆண்டு வெளிவந்த இச்சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர் வாசுதேவன் லோரன்ஸ் என அழைக்கப்படும் வணிக ஆசிரியராகிய இவரினை

மெதடிஸ்த மத்திய கல்லூரி முகவரியில் தொடர்பு கொள்ளமுடியும்.

## 14. அரங்கம்

1995ம் ஆண்டு இரா. தவராசா அவர்களால் அறிவொளி அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாதம் இரண்டுக்கு ஒரு இதழாக வெளிவருவது

## 15. போது

1998ம் ஆண்டு வாகரை வாணனினை ஆசிரியராக்கொண்டு ஜெஸ்கோம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் இதழ்

## 16. குரல்

1999ம் ஆண்டு திரு. அழகுகிருபாவினை ஆசிரியராக்கொண்டு அகம் இலக்கிய வட்டம் அம்பலத்தடி, வந்தாறுமூலை எனும் முகவரியினை கொண்டு வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## 17. இலக்கியா

வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து ஆ. ஸ்ரீதரினை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் மாத இதழ்

## 18. எனவே இனி

காத்தான்குடியிலிருந்து வெளிவந்ததாக திரு. செ. யோகராசா அவர்கள் ஈழத்து இலக்கிய சஞ்சிகைகள் எனும் கட்டுரையில் மேற்கோள்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

## 19. உதயன்

மட்டக்களப்பிலிந்து வெளிவந்ததாக திரு. செ. யோகராசா அவர்கள் ஈழத்து இலக்கிய சஞ்சிகைகள் எனும் கட்டுரையில் மேற்கோள்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

தரப்பட்ட சஞ்சிகைகளில் எதாவது விடுபடின் தவறுக்கு மன்னிப்புக்கோரி அடுத்த பகுதியினை நோக்குவோம்.

## * கல்வி ஸ்தாபனச் சஞ்சிகைகள்

கல்வி ஸ்தாபனச் சஞ்சிகைகளை கீழ் வருமாறு வகைப்படுத்தி

நோக்கமுடியும்.

1. கிழக்குப்பல்கலைக்கழகம்
2. விபுலானந்தா இசைநடனக் கல்லூரி,
3. அரசினர் ஆசிரியர் கலாசாலை
4. மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி
5. மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம்
6. பாடசாலைச் சஞ்சிகைகள்

## 1. கிழக்குப்பல்கலைக்கழகம்

கிடைக்கப்பெற்ற சஞ்சிகைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது Blossom, கிழக்கொளி, தழல், வெளி, கூர்மை, புவியருவி, நெய்தல், என்பன குறிப்பிடத்தக்கன.

### Blossom

கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தினால் ஆண்டுதோறும் வெளிருகின்றது.

### கிழக்கொளி

கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகை 1990 களின் முன் ஆரம்பிக்கப்பட்டு இடையில் ஏற்பட்ட வன்செயலினால் நின்று தொடர்ந்து வெளிவரும் இதழ் 40 இதழ்கள் மலர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தழல்

கிழக்குப் பல்கலைக்கிழக தமிழ்ச் சங்க வெளியீடு

### வெளி

கலை, கலாசார பீடம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது

### நெய்தல்

கலை, கலாசார பீடம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது

கூர்மை

வணிகமுகாமைத்துவ பீடம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

புவியருவி

புவியியல் பீடம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2. விபுலானந்தா இசைநடனக் கல்லூரி

''சுருதி'' ஆண்டுதோறும் கலைகளுடன் தொடர்புபட்ட கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

## 3. அரசினர் ஆசிரியர் கலாசாலை

ஆண்டு மலராக கலைச்செல்வி வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இது பல்வேறுபட்ட கவிஞர்களினை வெளிக்கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

## 4. மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி

ஆண்டுமலராக வித்தியாசாகரம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## 5. மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகம்

வித்தியா இதழ் வெளிவந்து நின்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## 6. பாடசாலைச் சஞ்சிகைகள்

மட்டக்களப்பு வலயம், கற்குடா வலயம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குமிடத்து மட்டக்களப்ப கல்விவலயத்தில்

*மட்./ புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை

ஆண்டுமலராக பூபாளம் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. 125ம் ஆண்டு நினைவு மலராக "Ceelian Melodies" வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

*மட்./ இந்துக்கல்லூரி

ஆண்டு மலராக ''பரணியும்'' ''விஞ்ஞானச்சுட''ரும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

*மட்./ வின்சன் தேசிய பாடசாலை

தினகரன் என்பவரால் கையெழுத்துப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டு

தற்போது அச்சு மூலம் ஆண்டு மலராக பேழை வெளிவருவது குறிப்பிடத்தக்கது

*மட்./ மெதடிஸ்த மத்திய கல்லூரி

1946 ல் ரி. பாக்கியநாயகம் மூலம் கையெழுத்துச் சஞ்சிகையாக ஜெயகேசரி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. ஜெயகேசரி தவிர இளைஞன், யுவன், செம்மை என்பனவற்றில் செம்மை காலாண்டு சஞ்சிகையாக 1988ம் ஆண்டு 6ம் மாதம் 1ம் திகதி வெளிவந்தது. பின் 1988ம் 9ம் மாதம் 28ம் திகதி ரோனியோ பிரதியாகவும் 1989ம் ஆண்டு 3ம் மாதம் 11ம் திகதி பழைய மாணவ நிதியுடன் அச்சுப்பிரதியாக வெளிவந்தமைகுறிப்பிடத்தக்கது. இவை தவிர கல்லூரியில் 125ம் ஆண்டு நிறைவாக (1814தொடக்கம் 1989) மத்தியதீபம் சிறப்பு மலர் வெளிவந்தது.

*மட்./ புனித மிக்கேல் கல்லூரி

றுகரம், உயிர் என்பன வெளிவந்தன என கருத்தியல் நிலவுகின்றது.

கற்குடா வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைச் சஞ்சிகைகள் காணப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற சஞ்சிகை விபரங்கள் வருமாறு

*மட்./ ஓட்டமாவடி மத்தியமகாவித்தியாலயம்

உதய நிலா எனும் சஞ்சிகை வெளிவந்ததாக கலாநிதி செ. யோகராசா எழுதிய மட்டக்களப்பு பாடசாலைச் சஞ்சிகைகள் (வித்தியா இதழ்) கட்டுரை புலப்படுத்துகின்றது.

*மட்./ செங்கலடி மத்திய கல்லூரி

2000ம் ஆண்டு 125ம் ஆண்டு சிறப்பு மலராக வெளிவந்த கோல் ஆண்டு தோறும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

*மட்./ வந்தாறுமூலை ஸ்ரீ மகாவிஷ்ணு வித்தியாலயம்

'ஏர்' ஆண்டு மலராக வெளிவருவது குறிப்படத்தக்கது.

*மட்./ கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயம்

புத்தொளி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

*மட்./ வாழைச்சேனை இந்துக்கல்லூரி

''செவ்வாழை'' எனும் சஞ்சிகை வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

***மட்./ வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம்**

தற்போது சித்தாண்டியில் இயங்கும் இப்பாடசாலை முன்னர் கிழக்குப் பல்கலைக்கழக கட்டிடத்தொகுதியில் கையெழுத்துச் சஞ்சிகையாக திரு. இரத்தினசிங்கம், இரத்தினகுமார், செல்வி. சுப்பிரமணியம் சுகந்தி, திரு. இ. பெஸ்லியோ வாஸ், சி. சண்முகராசா போன்றோர்களினை ஆசிரியராகவும் துணை ஆசிரியர்களாகவும் கொண்டு உதயம் எனும் கையெழுத்துச் சஞ்சிகை வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

***. பிரதேச செயலக சஞ்சிகைகள்**

கீழ்வரும் பிரதேச செயலகங்கள் முத்தமிழ் விழாவின் சிறப்பு மலராக பல்வேறுபட்ட சஞ்சிகைகளை வெளியிடுகின்றன. கிடைக்கப்பெற்ற சஞ்சிகைகள் வருமாறு :

1. மண்முனை வடக்கு, மட்டக்களப்பு - தேனகம்
2. கோறளைப்பற்று வாழைச்சேனை - இளம்பரிதி
3. போரதீவுப்பற்று வெல்லாவெளி - மருதம்
4. மண்முனைப்பற்று ஆரையம்பதி - சிகரம்
5. கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி - மருதோன்றி
6. ஏறாவூர் பற்று (தமிழ்) செங்கலடி - நானிலம்
7. ஏறாவூர்பற்று நகர் - தோழன்
8. மண்முனை தெற்கு வவுணதீவு - அகணி
9. மண்முனை தென் எருவில்பற்று - எழுவான்

ஏனைய பிரதேச செயலக சஞ்சிகைகள் கிடைக்கப்பெறவில்லை.

***. உள்ளூராட்சி திணைக்களச் சஞ்சிகைகள்**

ஆண்டு மலராக உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பிக்கும் வகையில் 2003ம் ஆண்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் உள்ளூராட்சி சிறப்பு மலர் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

***. அரசசார்பற்ற திணைக்களச் சஞ்சிகைகள்**

சூரியா பெண்கள் அமைப்பு, மன்று நிறுவனங்களின் வெளியீடுகள் எனும்போது சூரியா பெண்கள் அமைப்பின் மூலம் 'பெண்' எனும் சஞ்சிகையும், மன்று அமைப்பின் மூலம் சூழல்சுடர் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

* கூட்டுறவுச் சங்க சஞ்சிகைகள்

மலரும் வாழ்வு எனும் சஞ்சிகை வெளியீடு பற்றி கலாநிதி செ. யோகராசா அவர்கள் 1993 தேனக இதழில் மட்டக்களப்பு மாவட்ட சஞ்சிகைகள் எனும் கட்டுரை புலப்படுத்தியது குறிப்படத்தக்கது. இது தவிர மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கம் இணைகரம் எனும் சஞ்சிகையை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

* காகித ஆலைச் சஞ்சிகை

'காகித மலர்' வெளிவருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கட்டுரையின் பின்னர் முழுமையான ஆய்வாக புதிய கட்டுரை வெளிவரும் பட்சத்தில் அது இக்கட்டுரைக்குக் கிடைத்த முழுமையான வெற்றியாகும். மேலும் மட்டக்களப்பு மாவட்டம் பத்திரிகைகளும் சஞ்சிகளும் தேடப்பட்டு ஒரு பொதுவான இடத்தில் ஆவணப்படுத்தப்பட்டு பிற்கால சந்ததிக்கு கையளிக்கப்படவேண்டியது மட்டக்களப்பு மாவட்ட ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய பொறுப்பாகும். அவ்வாறு சேகரிக்கப்படும் நிலையில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பங்களிப்பினை உறுதிசெய்துகொள்ளமுடியும்.

**கே. எஸ். ஆர். சிவகுமார்,**
**கலாசார உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**கோறளைப்பற்று, வாழைச்சேனை.**

(விமர்சனங்களினை மேல் வரும் முகவரிக்கு அனுப்பவும்.)

கோரளைப்பற்று பிரதேச முத்தமிழ் விழா போட்டிநிகழ்வுகளுக்கு பரிசில்களாக நூல்தொகுதிகளை அன்பளிப்புச் செய்த திருமதி. N. ஸ்ரீதேவி (உதவிப்பணிப்பாளர், கலாசார அலுவல்கள்) வடகிழக்கு மாகாணசபை திருகோணமலை அவர்களுக்கும் எமது நன்றிகள்

\- கலாசாரப்பேரவை -

## கௌரவப்படுத்தப்படும் கலைஞர்கள்



பெயர் : **திரு. மாரிவெள்ளக்குட்டி**
விலாசம் : பேத்தாழை, வாழைச்சேனை,
பிறந்த திகதி : 26.04.1930
திறமை : நாட்டுக்கூத்து அண்ணாவி
சாதனைகள் : 1950ல் இருந்து நாட்டுக்கூத்து அண்ணாவியாக தொழில்பட்டு பல நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றி உள்ளமையுடன் கலைஞர்களையும் தோற்றுவித்துள்ளார்.

மேடையேற்றப்பட்ட கூத்துவிபரங்கள்

1. வள்ளியம்மை
2. நாரதர்கலகம்
3. 13ம் போர்
4. 14ம் போர்
5. பப்பரவாகன் சண்டை
6. குருசேத்திரப்போர்
7. மச்சவல்லபன் சண்டை
8. வனராசன் சண்டை
9. சராசத்தன் போர்
10. கர்ணன் சண்டை



பெயர் : **திரு. டொனி கரல் சொக்மன்**
விலாசம் : பேத்தாழை, வாழைச்சேனை.
பிறந்த திகதி : 02.03.1954
திறமை : இசைக்கருவி மீட்டுதல், பாடுதல்
சாதனைகள் : இசைக்கருவி மீட்டியபடி சிங்கள ஆங்கில பாடல்கள் பாடுவார்

பெயர் : **திரு. அ.மு.சி. வேலழகன்**
விலாசம் : புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
பிறந்த திகதி : 12.05.1939
திறமை : ஆக்க இலக்கியம்
வெளியிடப்பட்ட நூல்கள் :
1972 தீயும் தென்றலும் - கவிதை
1973 சாதியா சதியா- உரைநடை
1993 உருவங்கள் மானிடராய்-கவிதை
1996 அரங்கக் கவிதைகள்- கவிதை
1997 கமகநிலா - சிறுகதைத்தொகுப்பு
2001 மூங்கில் காடு - சிறுகதை
2003 விழியில் வழியும் கவிதை



# போட்டி முடிவுகள்

## அ. பாடசாலை மட்ட போட்டி முடிவுகள்

### 1. பேச்சு போட்டி

1ம் இடம் - செல்வி.க.சிந்துஜா மட்.வாழைச்சேனை இந்துகல்லூரி
2ம் இடம் - செல்வி.ச.ரேணுகா, மட்.பேத்தாழை விபுலானந்தா வி.
3ம் இடம் - செல்வி.ப.தயானி மட். பேத்தாழை விபுலானந்தா வி.

### 2. ஓவியப் போட்டி

1ம் இடம் - செல்வன்.சி.கோமதீபன் மட். கிண்ணையடி ச.வி.
2ம் இடம் - செல்வி.உ.தர்ஷிகா, மட்.வாழைச்சேனை இ.கல்லூரி
3ம் இடம் - செல்வி.கி.லக்கிசயா மட். புதுக்குடியிருப்பு வாணி.வி.

### 3. குழுநடனப் போட்டி

1ம் இடம் - மட். வாழைச்சேனை இந்துகல்லூரி
2ம் இடம் - மட். கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம்
3ம் இடம் - மட். புதுக்குடியிருப்பு வாணி.வித்தியாலயம்

### 4. கட்டுரைப் போட்டி

1ம் இடம் - செல்வி.சா.அனுஜாரதி மட்.வாழைச்சேனை இ.கல்லூரி

### 5. கவிதைப் போட்டி

1ம் இடம் - செல்வன்.சு. டிலக்சன் மட். புதுக்குடியிருப்பு வாணி.வி.
2ம் இடம் - செல்வி.அ.துர்ஜ்ஜாயினி, மட்.வாழைச்சேனை இ.கல்லூரி
3ம் இடம் - செல்வி.ம.கோமிதா, மட்.வாழைச்சேனை இ.கல்லூரி

### 6. விவாதப் போட்டி

1ம் இடம் - மட். வாழைச்சேனை இந்துகல்லூரி
2ம் இடம் - மட். கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயம்

### 6. நாடகப் போட்டி

1ம் இடம் - மட். வாழைச்சேனை இந்துகல்லூரி

## ஆ. வெளிமட்டப் போட்டி முடிவுகள்

### 1. கவிதைப் போட்டி

1ம் இடம் - செல்வி.க.மாலினி, கும்புறுமூலை கிரான்

### 2. சிறுகதைப் போட்டி

1ம் இடம் - செல்வி.எஸ்.அன்னலட்சுமி, கொண்டயன்கேணி வா.சேனை
2ம் இடம் - 1. செல்வி.ம.மதிவீனா, கறுவாக்கேணி வாழைச்சேனை
2. திரு.சு.அ.ஸ்ரீதர், விநாயகபுரம் வாழைச்சேனை

கோறளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பிரதான வீதி, வாழைச்சேனை.

## அங்கத்தவர் பொதுமக்கள் வாடிக்கையாளர்களுக்கு எமது நிறுவனம் வழங்கும் உன்னத சேவைகள்

1. பொதுக்களுக்கான நுகர்ச்சி சேவை
2. பிரயாணிகளின் வசதிகருதி சிறந்த போக்குவரத்துச்சேவை அத்துடன் குறைந்த கட்டணத்தில் பஸ் வாடகைவசதிகள்
3. தரமான போட்டோ பிரதி லெமினேட்டடிங் சேவைகள்
4. கட்டுப்பாட்டு விலையில் எரி பொருள் சேவைகள்
5. வாக்ன சுத்திகரிப்பு வசதிகள்
6. திருமண வைபவம் மற்றும் ஏனைய தேவைக்கு கதிரைகள், பீங்கான்கள் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடும் சேவைகள்
7. கிராமிய வங்கிச்சேவை

**எங்கள் சேவையில் இணைந்து உங்கள் தேவைகளை நிறைவேற்றுங்கள்.**


**கோறளைப்பற்று ப.நோ. கூ. சங்கம்**
**பிரதான வீதி வாழைச்சேனை**

தொ.பே.சி. 065 - 2257224

# KUBA BUILDERS LIMITED


Regd. No. PVS. 6835

## CONTRACTORS, CIVIL ENGINEERS & SUPPLIERS OF HEAVY MACHINERY & EQUIMENT



# குபா பில்டர்ஸ் லிமிட்டட்

## வாழைச்சேனை



Valachchenai

Tel. : 065 - 2257225

தரம் குன்றாத அழகிய
பவுண்
தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்



Visit for
Sovereign
GOLD JEWELLERIES

# தங்கமஹால் ஜூவலரி

# Thangamahal Jewellery

**பிரதான வீதி, வாழைச்சேனை**


**Main Street, Valaichchnai**



நம்பிக்கை

நாணயம்

நேர்மை



ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



வீட்டுக்குத் தேவையான சகல விதமான மளிகை சாமான்களையும் ஒரே கூரையின் கீழ் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய ஒரே இடம்

# ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
வாழைச்சேனை

Whole sale / Retail Shop



# விநாயகர் ஸ்டோர்ஸ்

*உரிமையாளர் :*

P. சிவப்பிரகாசம்

**எமது உன்னத சேவைகள்**

குறைந்த விலையில் தரமான
பொருட்களைப்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
இடம்

# விநாயகர் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
வாழைச்சேனை.

மொத்த சில்லறை விற்பனை நிலையம்

*Mrs. T. Jamuna*
*Proprietor*

# New Pearl Inns

## Tourist Guest House



Valachchenai Road,
Kaldudah
Tel. : 065 - 2257987

Bookings
Kalkudah.

Mrs. Thomas Victoria Selvamany
*(Proprietress)*

# SIMLA INN



(27 Years in Hospitality)

- * Rooms
- * Eastern Western Dishes
- * Sea Foods.

REST HOUSE ROAD, KALKUDAH
Situated 0.5km. to Passikudah Bay
Tel.: 077 - 6041450

அன்பளிப்புப் பொருட்கள் இந்தியன் எவர்சில்வர் பாத்திரங்கள் பெண்களுக்கான இந்திய அணிகலன்கள் பரிசுப்பொருட்கள் பாடசாலை உபகரணங்கள் அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# ரமணா வீடியோ விஷன்

திருமணத்திற்கு தேவையான இந்திய கூறைச்சேலை, வேட்டி என்பன விற்பனைக்கு உள்ளன.

சகல விசேட வைபவங்களுக்குத் தேவையான தரமான ஐஸ்கிறீம் ஓடருக்கு வழங்கப்படும்

லொரி, வான், வாடைக்கும் நாடவேண்டிய இடம்





## ரமணா

தொ.பே. இல.
065- 22257388


கல்குடா வீதி, பேத்தாளை,
வாழைச்சேனை

எங்களிடம் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பழைய புதிய திரைப்படங்கள், பாடல்கள Audio CD, VCD, MP3 வடிவங்களிலும் Cassette இலும் பெற்றுக்கொள்வதுடன் பதிவு செய்தும் கொடுக்கப்படும். உங்கள் வீட்டு இனிய நிகழ்வுகளை வீடியோ ஒலிப்பதிவு மூலமும், புகைப்பட அல்ப வடிவிலும் குறைவான விலையில் செய்துகொள்ள நாடவேண்டிய இடம்

## கிருஷ்ணா CD உலகம்

*உரிமையாளர் :*
*வி. கிருஸ்ணமேனன்.*

KRISHNAA C D WORLD




Selfphone :
0777 - 6551106

வாழைச்சேனை
Main Street, Valachchenai

அழகிய சிறந்த பவுண்
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



# அரிச்சனா ஜுவலரி



பிரதான வீதி, வாழைச்சேனை

*ஓடர் நகைகள் குறித்த தினத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.*



அதி உன்னத தங்க
நகைகளுக்கு நீங்கள் நாட
வேண்டிய ஒரே நகை
மாளிக்கை

# நபா கோல்ட் ஹவுஸ்

பிரதான வீதி, வாழைச்சேனை



Tel.: 065 - 22257844,
Bobile: 077-6176156

*ஓடர் நகைகள 22கரட் தங்கத்தில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

எம்மிடம் கொள்வனவு செய்யப்பட்ட
நகைகளை நீங்கள் வட்டியின்றி
அடைவு வைத்து மீளமுடியும்



Proprietor : Benjamin. J.

# ETHAN INN
# ETHAN INN

For Convenient & Comfortable
Accommodation in the Village of
Pasikudah

0777-142439
065 - 2226313

Pasikudah, Kalkudah

Available All Varieties of Sea
Foods
And Courteous Service.



# WINNER TRADERS

பழைய புதிய திரைப்பட பாடல்கள்
Audio CD, VCD, MP3
வடிவங்களிலும் Cassette இலும்
பதிவு செய்யப்படும் மற்றும்
Blank CD, CD Covers, Cassete,
Strickers, CD Tracks, Hand Phone
Accessories மற்றும் காகிதாதிகள்,
பாடசாலை உபகரணங்கள் பயிற்சிப்
புத்தகங்கள், Gift Items இன்னும்
பல விற்பனைக்கு உண்டு
Main Street, Valachchenai
Phone : 0776232792

# AKSHANA'S

Beach Road, Pasikudah
Kalkudah

# அக்ஷனாஸ்

கடற்கரை வீதி,
பாசிக்குடா
கல்குடா

Rooms and Meat
ரூம் அன்ட் சாப்பாடு

பஜாஜ் மோட்டார்
சைக்கிள்களை
முழுப்பணத்தினையும்
அல்லது பகுதி
பகுதியாக செலுத்தி
பெற்றுக்கொள்ள



## அஞ்சலோ மோட்டர்ஸ்
## ANGELO MOTORS



பிரதான வீதி
வாழைச்சேனை

# நியூ றாமீஸ் கொட்டல்

பிரதான வீதி
வாழைச்சேனை.
(இலங்கை வங்கி அருகே)

சுத்தமான காலை, மாலை, மதிய
உணவுகள், சிற்றுண்டி வகைகள்

*வீட்டு/ அலுவலகத்திற்கான
விசேட ஓடர்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.*

பழைய புதிய
திரைப்படங்கள்
CD கசெட், வீடியோ
ஓடியோ பதிவுகளுக்கும்
நாடவேண்டிய இடம்





## வீடியோ விஷன்

விபுலானந்தா வீதி,
வாழைச்சேனை.


# மலரும் நினைவுகள்...



சிறுகதைப் பயிற்சிப்பட்டறை - 2003



சர்வதேச சிறுவர் தினமும், முதியோர் வாரமும் - 2003



பிரதேச விளையாட்டுவிழா - 2004



பாசிக்குடா சிரமதானப் பணி

## கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் இதயம் கனிந்த நன்றிகள் இவர்களுக்கு...

கோறளைப்பற்றுப் பிரதேச கலாசாரப் பேரவையின் ஸ்தாபித்து வழிகாட்டியாகத் தலைமை தாங்கும் கலாசாரப் பேரவையின் தலைவராகிய பிரதேச செயலாளர் கலாமதி பத்மராஜா அவர்களுக்கும் துணை நிற்கும் ஏனைய உத்தியோகத்தர்களான கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், வெளிக்கள, உள்ளக உத்தியோகத்தர்களுக்கும் எமது முதற்கண் நன்றிகள்.

நிதியுதவி எனும் நிலையில் விளம்பரம் தந்துதவிய ப.நோ.கூ.சங்க தலைவர்களுக்கும், வர்த்தகப் பொதுமக்களுக்கும் எமது நன்றிகள்.

நன்கொடை நிதியுதவி புரிந்த ESCO நிறுவனத்திற்கும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் எமது நன்றிகள்.

நிதி சேகரிப்பு தொடர்பாக நிதிசேகரித்தலில் ஈடுபட்ட கிராம சேவையாளர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வெளிக்கள உள்ளக உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகள்.

பாடசாலை மட்டப் போட்டிகள் இனிதே நடைபெற ஆதரவு நல்கிய வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரி, பாடசாலை அதிபர்கள், மாணவ மாணவிகளுக்கும், மண்டபம் நல்கிய மட். வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபருக்கும் நடுவர்களுக்கும் பங்குபற்றிய மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றிகள்.

முத்தமிழ் விழா வெளிவாரிப்போட்டிகள் இனிதே நடைபெற ஆதரவு நல்கிய கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும், கலைஞர்களுக்கும், மண்டபம் நல்கிய மட். வாழைச்சேனை இந்துக் கல்லூரி அதிபருக்கும் நடுவர்களுக்கும் எமது நன்றிகள்.

மலர் வெளியீட்டில் நன்றிக்குரியவர்கள் :
அட்டைப்படம் அழகுற வரைந்தும், இலட்சினை சீர் அமைத்து தந்த திருமதி. சாந்தி குமாரவேல் அவர்களுக்கும்.

ஆசியுரை, வாழ்த்துச்செய்தி நல்கிய உயர் அலுவலர்களுக்கும்

ஆக்கங்களைத் தந்துதவிய படைப்பாளிகளுக்கும்,

மலர்த் தொகுப்பாளர்களான :
திரு. மு. தவராசா, திரு. எம். முத்துமாதவன், திரு. அ. ஸ்ரீதர், திரு. ச. நிமலநாதன், திரு. சீ. பரமானந்தராசா அவர்களுக்கும் விடய எழுதுனர் திரு. ச. மாதவன் ஆகியோருக்கும்,

மலரை கணனி மூலம் வடிவமைத்துத் தந்த செ. கண்ணன் அவர்களுக்கும்,

மலரை அழகுற அச்சிட்டு உரிய நேரத்தில் வெளியிட உதவிய துர்க்கா அச்சகத்தினருக்கும்,

நூல் விமர்சகராகிய திரு. அன்பழகன் குரூஸ் அவர்களுக்கும்,

முத்தமிழ் விழாவினை சிறப்பிக்க வருகை தந்துள்ள பெருமக்கள், கலைஞர்கள், மாணவ மாணவிகளுக்கும், சிறப்புப் பேச்சாளர் ஆகிய திரு. மு. தவராசா அவர்ளுக்கும்,

விழா சிறப்படைய மண்டம் நல்கிய மட். வாழைச்சேனை இந்துக்கல்லூரி அதிபருக்கும் ஆசிரிய மாணவ மரணவிகளுக்கும்,

விழா மேலும் சிறப்படைய சகல வழிகளிலும் துணைநின்ற கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோ கத்தர்களுக்கும் உள்ளக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும்

எமது நன்றிகள்

**கே. எஸ். ஆர். சிவகுமார்,**
கலாசார உத்தியோகத்தர்,
செயலாளர் - கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம் - கோறளைப்பற்று,
**வாழைச்சேனை.**

***K. Yoharajan***
*Properietor*

# Pas Boy Rest Inn

**Pasikudah**
**Kalkuda - Valaichchenai.**

**Gust House & Restaurant**

Pasikudah
Selfphone : 0777 - 141648






Available here :

- * Rooms
- * Eastern Western Dishes
- * Sea Foods.





Pas Boy Rest Inn
Pasikudah,
Kalkudah, Valaichchenai.

# செலிங்கொ
# ஆயுள் காப்புறுதி

ஒரு தசாப்பத்தின் வெற்றியளராக நீங்களும்

பாதுகாக்கப்பட

CEYLINCO LIFE




செலிங்கொ ஆயுள்

**Big or small Ceylinco protects them all**

**CEYCLINCO INSRURANCE COMPANY LTD.**
**VALAICHCHENAI - BATTICALOA**

அரிய வேலை வாய்ப்புக்கள் :
(பகுதி நேர முழுநேர வேலைவாய்ப்புக்கள்)

* சம்பளம் உங்கள் திறமைக்கேற்ப ஆயிரக்கணக்கில்
* விபரங்களுக்கு நேரடியாக சமுகம் தரவும்.

***விபரங்கள் அறிய :***

பிராந்திய முகாமையாளர்,

செலிங்கொ ஆயுள்
கோறளைப்பற்று ப.நோ.கூ.சங்கக் கட்டிடம்,
பிரதான வீதி. வாழைச்சேனை.

செலிங்கொ ஆயுள்
20/1, மத்தியவீதி,
மட்டக்களப்பு.

தூரிகா அச்சகம் - 334, திருமலை வீதி, மட்டக்களப்பு, 077-142398